# ழவர் போராட்டத்தின் உண்மை



டு கிஸான் சபை,

டவிட்ஸன் தெரு,

. டி., சென்னை

94

94

Y42.211
N47
100990

# உழவர் போராட்டத்தின் உண்மை

## அவதூறுகளுக்கு ஆணித்தரமான பதில்

எழுதியது
"உழவர் தோழன்"

**தமிழ்நாடு கிஸான் சபை**

*வெளியீடு*


6, டேவிட்ஸன் தெரு,

ஜி. டி., சென்னை.

1947, மே] [விலை அணா 4

Published by Tamilnad Kisan Sabha Q.H.M.S. 434
Printed at the Janasakthi Press, Madras. Q.H.M.S. 374
Date of Printing 28th May, 1947

# முன்னுரை

தமிழ்நாடு கிஸான் சபையின் சார்பில் வெளியிட்டுள்ள இந்தப் புத்தகம், தமிழ்நாட்டில் தற்சமயம் தஞ்சை, திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம் ஆகிய ஜில்லாக்களில் விவசாயிகளின் போராட்டங்களின் உண்மையான காரணங்களை நன்கு விளக்குகிறது.

ஸ்ரீமான் டி. பிரகாசம், பிரதமராக இருந்தகாலத்தில், விவசாயிகள் மீதும், கிஸான் சபையின் மீதும், கிஸான் சபையை அமைப்பதிலும் நடத்துவதிலும் பெரும்பங்கு கொண்டுள்ள கம்யூனிஸ்டுகள் மீதும், பலாத்காரம் புரிவதாகவும், நெல்லை கொள்ளையடிப்பதாகவும், சாகுபடிக்கு குந்தகம் விளைவிப்பதாகவும், அபாண்டமான பழிகளைச் சுமத்தி, அவசரச் சட்டத்திற்கும், அடக்குமுறைக்கும் ஆதரவு தேடினார். காங்கிரஸ் மந்திரி சபைக்கு தொந்தரவு கொடுப்பதற்காக கம்யூனிஸ்டுகள் செய்யும் வேலையென்பதாகவும், கிஸான் போராட்டங்களைப்பற்றி மாஜி மந்திரிகளும், சில சட்டசபை அங்கத்தினர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

கூலி உயர்விற்காகவும், நியாயமான குத்தகைக்காகவும், குடியானவர்களும், விவசாயிகளும், கொள்ளைலாப மிராசுதார்களை எதிர்த்து நடத்தும் போராட்டங்களை, வெறும் காங்கிரஸ்-கம்யூனிஸ்டு தகராரென்று திரித்துக் கூறுவது நேர்மையாகாது. விவசாயிகளுக்கு நியாயம் வழங்கமுடியாது. மிராசுதார்களுக்குத்தான் சாதகமாகும். கம்யூனிஸ்டுகளில்லாத பிரதேசங்களிலும், காங்கிரஸ்காரர்களே தலைமைதாங்கி நடத்தும் பிரதேசங்களிலும் குத்தகை கொள்ளையை எதிர்த்து விவசாயிகள் போராடுகின்றனர்.

பலாத்காரத்தை ஏவி விடுவது போலிசும், மிராசுதார்களின் குண்டர்களும்தான். சாதாரண விவசாயிகள், குடியானவர்களல்ல என்பதும் தெளிவாகும்.

நிலம் தரிசு போடுவதற்கு காரணம் விவசாயிகள் அல்ல. விவசாயிகளைப் பட்டினிபோட்டு பணியவைக்க வேண்டுமென்பதற்காக மிராசுதார்களின் பழிவாங்கும் கொள்கைதான் காரணம். 20, 30 வருடகாலமாக, வாரத்திற்கு உழுதுவந்துள்ள விவசாயிகளுக்கு பயிரிட நிலம்

கொடுக்க முடியாதென்று மிராசுதார்கள் அழும்பு செய்கிறார்கள். தன்னுடைய உரிமைக்காகப் போராடிய குற்றத்திற்காக, குடியிருக்கும் வீட்டிலிருந்து கூட விவசாயிகள் விரட்டப்படுகின்றனர்.

உணவு நெருக்கடி மிகுந்த காலத்தில் விவசாயத்தை சீர்குலைப்பது மிராசுதார்கள்தான். அவர்களுக்கு போலீஸ் உதவியளிப்பது அவர்களின் போக்கை இன்னும் ஆதரிக்கிறது.

உற்பத்தியான நெல்லையும் பதுக்கிவைத்துக்கொண்டு பொதுஜன மந்திரி சபைக்கு சங்கடம் விளைவிப்பதும், மிராசுதார்களின் பேராசைதான் காரணம்.

உணவு உற்பத்தியைப் பெருக்க, கொள்முதல் வெற்றியடைய, விவசாயிகளிடையே அமைதியும் திருப்தியும் ஏற்படவேண்டியது அவசியம். பொதுஜன மந்திரி சபை உண்மையான காரணங்களை உணர்ந்து பரிகாரங்களைத்தேட உடனடியான முயற்சி எடுக்கவேண்டும்.

மிராசுதார்களுக்கும், விவசாயிகளுக்குமிடையே நடைபெறும் போராட்டம், உணவு நெருக்கடியை உற்பத்தி செய்பவர்களுக்கும் உணவு நெருக்கடியை தடுப்பவர்களுக்குமிடையே நடைபெறும் போராட்டமாகும்.

இந்த உண்மைகளை பொதுமக்கள் பாரபக்ஷமின்றி உணர்ந்துகொள்ள, இந்தப் புத்தகம் உதவியாகும்.

—"உழவர் தோழன்"

# உழவர் போராட்டத்தின் உண்மை

பஞ்சப்பேய் மீண்டும் தலைதூக்கத் தொடங்கி யிருக்கிறது. தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும், உணவு நெருக்கடி மிகவும் அதிகமாக இருப்பதாகச் செய்திகள் வந்துகொண்டிருக் கின்றன. முக்கியமாக கோயம்புத்தூர், சேலம், மதுரை, ராம நாதபுரம் ஜில்லாக்களில் உணவு நெருக்கடி மிகவும் ஜாஸ்தியாக இருக்கிறதென்று அங்கிருந்து வந்துள்ள செய்திகள் கூறுகின் றன. போதிய ஸ்டாக் இல்லாததால் ரேஷன் கடைகள் மூடப் படுகின்றன. மற்ற இடங்களில், சப்ளை செய்யப்பட்ட ஸ்டாக்கு கள் நேராக கள்ள மார்க்கெட்டுக்குப் போய்விடுகின்றன. உண வைத் தேடி, மக்கள் ஊர் ஊராகச் செல்லுகிறார்கள். உணவு சப்ளைக்கான ஏற்பாடுகள் செய்யும்படி அதிகாரிகளைத் தூண்டு வதற்காக அங்கங்கே பட்டினி ஊர்வலங்கள் நடத்தப்படுகின்றன.

"நாங்கள் என்ன செய்ய முடியும்" என்று அதிகாரிகள் வழக்கம்போல் கையை விரிக்கின்றனர். மொத்தத்தில் நிலைமை மிகவும் மோசமாகி வருகிறது. போன வருஷம், இதே சமயத் தில்தான் சர்க்கார் ரேஷனைக் குறைத்தார்கள். ரேஷன் அளவை அதிகரிக்கப் போவதாகப் பேச்சுகள்தான் பலமாக இருக்கிறதே ஒழிய, ரேஷன் குறைந்து விடுமோ என்று கவலைப்படக் கூடிய நிலைமைதான் இப்போது மீண்டும் ஏற்பட்டிருக்கிறது. இப் போது கொடுக்கப்படும் ரேஷனாகிய 12 அவுன்ஸ் கிட்டத்தைத் தொடர்ந்து கொடுக்க முடியுமா என்று உணவு மந்திரி ஏற்கனவே சந்தேகத்தை வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார்.

ஏப்ரல் 11-ந் தேதியன்று இந்தோனேஷிய தூதுகோஷ்டி யிடம், உணவு மந்திரி டாக்டர். டி. எஸ். எஸ். ராஜன் ஒரு யாதாஸ்தை சமர்ப்பித்தார். அதில் கொடுக்கப்பட்ட புள்ளி விவ ரங்கள் பின்வருமாறு:—

"யுத்தத்துக்கு முன்பு இந்த மாகாணத்தில் 49 லட்சம் டன் அரிசி சாதாரணமாக உற்பத்தியாகிக் கொண்டிருந்தது. 28 லட் சம் டன் பருப்பு வகைகள் உற்பத்தியாயின. இதைத்தவிர எல்லா வகைகளையும் சேர்த்து சுமார் 526000 டன் உணவுப் பொருள் களை இந்த மாகாணம் இறக்குமதி செய்து கொண்டிருந்தது. 1946—47-ல் 48,27,000 டன் அரிசியும், 23,38,000 டன் பருப்பு

வகைகளும் உற்பத்தி செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கிறோம்.”

அக்டோபர் மாதம் முடிய, தற்போதைய ரேஷனாகிய 12 அவுன்ஸைத் தொடர்ந்து கொடுக்க வேண்டுமானால், மொத்தம் சுமார் 4,13,372 டன் உணவுப் பொருள்கள் இந்த மாகாணத்துக்கு வேண்டுமென்பது டாக்டர் ராஜன் திட்டம். இதில் அரிசி மட்டும் 3,72,014 டன் வேண்டும். யுத்தத்துக்கு முன்னால் நாம் வாங்கிவந்த பொருள்களை இப்போது வாங்கவேண்டுமென்றால், இப்போதிருப்பதைப்போல் 10 மடங்கு பற்றாக்குறை ஏற்படும். இதைப் பார்க்கும்போது, நமது தேசத்தில், உணவு நெருக்கடி என்பது ஒரு நிரந்தரமான விஷயமாகி விட்டதாகத் தோன்றுகிறது.

அதிக உணவு உற்பத்தி இயக்கம், கிணறுகள் வெட்டுவது, போனஸ் கொடுப்பது முதலிய திட்டங்கள் எல்லாம் இருந்தும்கூட உணவு உற்பத்தி குறைந்திருக்கிறது என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். சர்க்காரின் இந்த திட்டங்கள் எவையும் நிலத்தை உழுது பயிர் செய்யும் விவசாயிக்கு உதவி செய்பவைகளாக இல்லாமல், நிலச் சுவான்தார்களுக்கு உதவுபவைகளாக இருந்ததே, உணவு உற்பத்தி இப்படிப் போனதற்குக் காரணம்.

## மந்திரி சபைக்கு தமிழ்நாடு கிஸான் சபை யாதாஸ்து

பிரகாசம் மந்திரி சபைக்கு 1—6—46 அன்று தமிழ்நாடு கிஸான் சபை யாதாஸ்தை சமர்ப்பித்தது. உணவு உற்பத்தி அதிகரிப்புக்கான சில ஆலோசனைகள் அதில் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை பின்வருமாறு :—

1. ஜமீன்தார்களிடமும், மிராசுதார்கள் வசமும் தரிசாகக் கிடக்கும் நிலங்களை எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொண்டு, அவற்றை, இந்தப் பஞ்சகாலம் முடியும் வரையில், உணவு உற்பத்திக்காக விவசாயிகளிடம் இலவசமாகக் கொடுக்க வேண்டும். இந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி 1942-ம் வருஷத்திலேயே ஜில்லா கலெக்டர்களுக்கு சர்க்கார் உத்திரவிட்டிருக்கிறது. 1944-ம் வருஷத்தில் எஸ்டேட் நிலச் சட்டம், இதற்காக திருத்தப்பட்டது என்பதையும் கவனிக்கவேண்டும். ஆனால் அதெல்லாம் ஒன்றும் நடக்கவில்லை.

2. நீர்ப்பாசன வசதிகளை அதிகரிப்பதற்காக சர்க்கார் வகுத்துள்ள திட்டங்களை உடனே முடித்துவைக்கவேண்டும்.

இது சம்பந்தமாக சொந்த நீர்ப்பாசன சட்டம் நிறைவேறியும் கூட, வேலை என்றும் நடக்கவில்லை என்பதையும் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது.

3. பயிரிடும் விவசாயிகளுக்கு அந்த நிலத்தில் குடிவார உரிமை இருக்கவேண்டும்; சட்டத்தின் மூலமாக இதை ஊர்ஜிதம் செய்ய வேண்டும். குறிப்பிட்ட நிலத்தை எவ்வளவு நாட்கள் பயிரிடப் போகிறோமோ, என்னவோ என்ற சந்தேகத்தினால் அந்த நிலத்தை எருவிட்டு, மற்ற அபிவிருத்திகளும் செய்வதற்கு வேண்டிய உற்சாகம் விவசாயிகளுக்கு இருப்பதில்லை. இதனால் விளைச்சல் அதிகரிக்க முடியாமல் போகிறது.

4. சர்க்கார், மிராசுதார், குடியானவர்கள் ஆகிய மூன்று தரப்பாரின் பிரதிநிதிகளும் கொண்ட குத்தகை நிர்ணய போர்டு ஒன்று நியமிக்க வேண்டும். ஒரு பிர்க்காவுக்கு ஒரு போர்டுவீதம் இது நியமிக்கப்பட வேண்டும்.

5. ஒவ்வொரு பிர்க்காவுக்கும் கூலி நிர்ணய போர்டு ஒன்று நியமிக்கப்பட வேண்டும். விவசாயத் தொழிலாளிகளுக்கு கூலி என்ன என்பதை இதுதான் நிர்ணயிக்கும். விவசாயத் தொழிலாளர், குடியானவர்கள், சர்க்கார் ஆகியவர்களின் பிரதிநிதிகள் இதில் இருக்கவேண்டும்.

6. விவசாயத் தொழிலாளிகள், குடியானவர்கள், சர்க்கார் ஆகியோரின் பிரதிநிதிகளைக்கொண்ட உணவு உற்பத்திக் கமிட்டிகளை, ஒவ்வொரு பிர்க்காவிலும் நியமிக்கவேண்டும். உணவு உற்பத்தி, தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவருவது, கிணறுகள் வெட்டுவது, விவசாயக் கருவிகளை விநியோகிப்பது, விதைகள் விநியோகிப்பது முதலியவை சம்பந்தவாக இந்தக் கமிட்டி திட்டங்கள் தயாரிக்கும்.

விவசாய சீர்திருத்தம்பற்றி புரட்சித் திட்டங்கள் எதையும் மேற்கண்ட யாதாஸ்து சொல்லிவிடவில்லை. உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காகச் செய்ய வேண்டிய குறைந்தபட்ச சீர்திருத்தங்களையே அடுத்து எடுத்துரைத்தது. இவற்றை ஒப்புக்கொண்டு பெய்ஸ்பூர் காங்கிரஸே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. காங்கிரஸ் தேர்தல் விக்ஞாபனத்திலும் இவற்றை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு என்ற முறையில் உணவுப் பிரச்னையைத் தீர்க்க, பிரகாசம் மந்திரி சபை முயற்சி செய்யவில்லை. இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அதிகார வர்க்கத்தினரையும், நிலச்சுவான்தார்களையுமே பிரகாசம் மந்திரிசபை நம்பி யிருந்தது.

# 11 மாத வழவழா

ஏழ்மையினால் புழுங்கி வருந்தும் லட்சக் கணக்கான குடியா யானவர்களுக்கும், விவசாயத் தொழிலாளருக்கும் சிறிது நிவா ரணம் அளிப்பதற்கான சாதாரண விவசாய சீர்திருத்தங்களைக் கூட சர்க்கார் செய்யவில்லை.

நமது பொருளாதார திட்டத்தில், விவசாயத் துறையைப் பற்றியும், உணவு உற்பத்தி பற்றியும் நினைக்கும்போது, அரைப் பட்டினியாக உள்ள இந்த விவசாயிகள்தான் அதற்கு ஜீவாதார மானவர்கள் என்பது நிச்சயமாகிறது. தாங்கள் கொடுத்த தேர் தல் வாக்குறுதிகளை காங்கிரஸ் நிறைவேற்றும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் பிரகாசம் மந்திரி சபை என்ன செய் தது? விளைச்சலில் பெரும்பங்கை குத்தகையாக வசூல் செய்தும், நிலத்திலிருந்து குடியானவர்களை பலவந்தமாக வெளியேற்றியும், குடியானவர்களின் வாழ்க்கையை மிகவும் மோசமாக்கிய, அதே ஜமீன்தார்களுக்கும், மிராசுதார்களுக்கும் மந்திரி சபை திருப்தி யளிக்க வழி தேடியது. இந்த ஜமீன்தார்களும், மிராசுதார்களும் காங்கிரஸ் கொடியைப் பிடித்துக்கொண்டு, தேசியப் போர்வை யையும் போர்த்திருந்தனர். எவ்வளவோ நாட்களாக திரண்டு அடங்கியிருந்த அதிருப்தி, திடீரென்று அணைகடந்த வெள்ளம் போல் எல்லைகளை மீறிவிட்டது. முன்பின் கண்டிராத அளவில் விவசாயிகள் சீறி எழுந்தனர். பழங்கால சுரண்டல் முறையை அவர்கள் ஒழித்துக்கட்டத் தீர்மானித்து விட்டனர். அவர்களு டைய சக்தி பலவழிகளிலும் சிதறிவிடாமல், அவர்களுடைய கோரிக்கைகளுக்காக ஒழுங்கான முறையில் போராடுவதற்காக கிஸான் சபை அவர்களை ஸ்தாபனரீதியில் திரட்டி வருகிறது. கிராமாந்திர மக்களிடையில் இன்று மகத்தான விழிப்பு ஏற்பட் டிருக்கிறது. தங்களுடைய கூட்டாளிகளான பணக்காரர்களுக்கு உதவுவதற்காக, அதிகார வர்க்கம் மேற்கூறிய விழிப்பை நசுக்கு வதற்கான தீவிர முயற்சிகள் செய்து வருகிறது. கம்யூனிஸ்டு களின்மீது காங்கிரஸ் தலைவர்களுக்கு உள்ள ஆத்திரத்தை, அதி கார வர்க்கம் உபயோகித்துக்கொள்கிறது.

இந்த முறையை உபயோகித்துக்கொண்டு, விவசாயிகளின் நடவடிக்கைகளை எல்லாம் "இது கம்யூனிஸ்டுகளின் சூழ்ச்சி; காங்கிரஸ் சர்க்காரை எதிர்ப்பதற்காகவே இது நடத்தப்படு கிறது" என்று சொல்லி, அவற்றை நசுக்குவதற்கு அதிகார வர்க் கம் முயற்சி செய்கிறது. 'அதிகார' வர்க்கம் விரித்த இந்த வலை யில் பிரகாசம் மந்திரி சபை சிக்கிவிட்டது.

## கம்யூனிஸ்டுகள் காரணமா?

இதை மனதில் வைத்துக்கொண்டு, ஜனவரி 30-ந் தேதியன்று சட்டசபையில் ஸ்ரீ பிரகாசம் செய்த பிரசங்கத்தைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

பொதுஜனப் பாதுகாப்பு அவசரச் சட்டத்தை ஆதரித்து அவர் அன்று பேசியதாவது:—

பல ஜில்லாக்களில் கம்யூனிஸ்டுகள் தகராறுகளைக் கிளப்பி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். மலபார், தஞ்சாவூர் ஜில்லாக்களில் சட்டத்தையும், ஒழுங்கையும் அவர்கள் மீறிவிட்டார்கள். பயங்கர முறைகளை கையாண்டு, நிலங்களை பலாத்காரமாக கைப் பற்றி, சொந்த சொத்துகளைக் கொள்ளையடித்து, பயிர்களுக்கும் கம்யூனிஸ்டுகள் தீவைத்தனர்".

காங்கிரஸ்மீதுகூட முன்காலத்தில் எல்லாம், அதிகார வர்க்கம் இதே பாஷைப் பிரயோகம்தான் செய்து வந்தது.

ஒரு இடத்திலோ, குறிப்பிட்ட ஒரு பகுதியிலோ, ஜில்லாவிலோ மட்டும் இந்த விவசாயத் தகராறு இல்லை என்பதை ஸ்ரீ பிரகாசம் ஒப்புக்கொண்டார்.

இது உண்மைதான். எங்கு கண்டாலும் விவசாயிகளின் அதிருப்தி இருந்து வருகிறது. எல்லா ஜில்லாக்களுக்கும் அது பரவிவிட்டது. கம்யூனிஸ்டுகளோ, கம்யூனிஸ்டுகள் இல்லையோ, எவ்வளவோ வருஷங்களாக தங்களை கசக்கிப் பிழிந்து வந்தவர்களுக்கு எதிராக விவசாயிகள் சீறி எழுந்து விட்டனர்; ஆனால் ஸ்ரீ பிரகாசமோ, இந்த விவசாயிகள் சங்கம் செய்வதற்கெல்லாம் பொல்லாத கம்யூனிஸ்டுகளே காரணம் என்று கூறுகிறார்.

## தஞ்சையில் நடந்தது என்ன?

தஞ்சாவூர் சம்பவங்களைப்பற்றி அப்போது பிரதமராக இருந்த பிரகாசம் பின்வருமாறு கூறினார்:—

சென்னை மாகாணத்தில் மிகச் சிறந்தது தஞ்சாவூர் ஜில்லா. அங்கிருந்துதான் மற்ற ஜில்லாக்களுக்கு உணவுப் பொருள்கள் வந்துகொண்டிருந்தன. கம்யூனிஸ்ட்கள் இந்த ஜில்லாவை வெறும் பாலைவனமாக்கிவிட்டனர். நிலங்களின் சொந்தக்காரர்கள் அந்த நிலங்களைப் பயிரிட முடியாமல் கம்யூனிஸ்ட்கள் செய்துவிட்டார்கள். தங்கள் நிலங்களின் சாகுபடியை அனுபவிக்க முடியாதபடி அவர்கள் செய்தார்கள். சர்க்காரின் உத்திரவுப்படிகூட தானியங்களை விநியோகிப்பதற்கு அவர்கள் விடவில்லை. ஒரு பகுதியில் 5 அல்லது 6 ஆயிரம் பேர் படை எடுப்பதைப்

போல் சென்று அந்த பகுதியை எல்லாம் கொள்ளையடித்து, கிடைத்ததையெல்லாம் வாரிச் சென்றனர். சில நண்பர்கள் இந்தச் செய்தியை என்னிடம் தெரிவித்தனர். போலீஸ் இலாகா தலைவருக்கு இதை அறிவித்து, விசாரணை செய்யும்படி கூறினேன், அவர்கள் அங்கு சென்று விசாரணை செய்தார்கள். என்ன நடந்தது என்பதுபற்றி அறிக்கை தயாரிக்கும்படி கூறினேன். பலாத்காரச் செயல்கள் நடக்கவில்லை என்று சட்டசபை அங்கத்தினர் ஒருவர் சொன்னார். இந்த சம்பவங்களைப்பற்றி என்னிடம் அறிவித்தவர்களை நான் சந்தித்து, அவற்றைப் பற்றி கேட்ட போது, "எல்லாம் ஓய்ந்த பிறகு யாரோ ஒருவர் வந்து விசாரித்து விட்டுப்போனது மிகவும் துரதிருஷ்டகரமான விஷயம். அவர் வந்தபோது ஒன்றுமில்லாமல் இருந்திருக்கலாம்" என்று கூறினார்கள். அந்த ஜில்லா முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆட்களுக்கும் சொத்துகளுக்கும் இன்று பத்திரக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் ரெவினியூ மந்திரி ஸ்ரீ கே. ஆர். கரந்த் சுற்றுப்பிரயாணம் செய்தார். அங்குள்ள நிலைமையை உள்ளபடி அறிந்து கொள்ளவும், ஒரு அறிக்கை தயாரிக்கவும் அவர் சென்றார். அந்த இடத்துக்குச் சென்று, சமரஸம் செய்ய முயன்றால், அவர்களுக்கு இடையிலுள்ள தகராறுகளை ஒரு வழியாகத் தீர்க்கலாம் என்று சர்க்காருக்குத் தோன்றிற்று. ஸ்ரீமான்கள் ராகவ மேனனும், பாஷ்யமும் அங்கு சென்றார்கள். அவர்கள் அங்கே இருந்தபோது, அங்கிருந்த கம்யூனிஸ்ட் தலைவர் ஒருவர், ஒரு மந்திரியை கேவலமாகப் பேசினார். ஏதாவது ஒரு சமரஸம் ஏற்பட்டால் போதும் நிலைமை, அபிவிருத்தி அடையும் என்ற எண்ணத்தினால் இவற்றை மந்திரிகள் பொறுத்துக்கொண்டனர். அநியாயமான காரியங்கள் நடந்தன. வெளியூரிலிருந்து ஒரு மிராசுதார் இரண்டு வேலைக்காரர்களை அழைத்து வந்திருந்தார். கம்யூனிஸ்டுகளின் விஷமச் செயல்களைப் பொறுக்கமாட்டாமல், அவர் வெளியிலிருந்து அவர்களைக் கூட்டிக்கொண்டு வந்திருந்தார். இந்த வேலையாட்களை கொலைசெய்துவிட்டனர். விவசாயிகள் தகராறைக் கிளப்பிவிட்டவர்களின் செய்கையால், அந்தப் பகுதி முழுவதிலும் அராஜகம் தாண்டவமாடியது. நிரபராதிகள் கொலையுண்டனர்.

## போலீஸ்-பணமுட்டைகளின் புளுகுப் பிரசாரம்

ஸ்ரீ பிரகாசத்தின் பிரசங்கத்திலிருந்து ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் நடந்தது என்ன என்பதுபற்றி மற்றவர்கள சொன்னதுதான் அவருக்குத் தெரியுமே ஒழிய, நேரடியாக அவர் ஒன்றும் தெரிந்து கொள்ளவில்லை. இந்தச் செய்தியை யாரோ நண்பர்கள் தெரிவித்ததாக அவரே ஒப்

புக் கொள்ளுகிறார். அறிக்கைகள் வந்தபோது, அதில் கூறப்பட்டுள்ளதைப் போன்ற சம்பவங்கள் நடக்கவில்லை என்று ஒருவர் கூறியதாகவும் அவர் சொல்லுகிறார். ஸ்ரீ பிரகாசத்தினிடம் செய்தியைத் தெரிவித்தவர்கள் யார் என்பதை நாம் சுலபமாக அறிந்துகொள்ளமுடியும். காங்கிரஸ் பெயரை உபயோகித்துக் கொண்டு, சட்டசபையில் இடம் பெற்றுள்ள மிராசுதார்களைத் தவிர வேறு ஒருவரும் இந்த செய்தியை ஸ்ரீ பிரகாசத்தினிடம் கூறவில்லை. கிஸான் சபை மீதும்; கம்யூனிஸ்டுகள் மீதும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று துடியாய்த் துடித்தவர்கள் அவர்கள்தான். அப்போது தஞ்சாவூரிலிருந்த ஜில்லா அதிகாரிகளை வேறு ஊருக்கு மாற்றிவிடவேண்டுமென்றும் அவர்கள் கேட்டனர். அந்த அதிகாரிகள் மாற்றப்பட்டுச் சென்ற பிறகு, மேற்கண்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ள சம்பவங்கள் எல்லாம் கற்பனை செய்யப்பட்டன என்பது தெளிவாகத் தெரிகிறது. காங்கிரஸ் மந்திரிகளுக்கு தப்பு அபிப்பிராயம் ஏற்படுத்துவதற்கான முறையிலும், மிராசுதார்களுக்கு சாதமாக இருக்கும்படியாகவும் இந்த அறிக்கைகள் கற்பனை செய்யப்பட்டிருக்கின்றன.

## உண்மை என்ன?

ஸ்ரீ பிரகாசம் சாட்டிய குற்றச்சாட்டுகள் ஒருபுறமிருக்கட்டும். உண்மையில் நடந்தது என்ன? தஞ்சாவூர் ஜில்லா முழுவதிலும் விவசாயிகள் தகராறுகளைக் கிளப்பிவிடும்படியாக இங்கு அதிக கம்யூனிஸ்டுகள் கிடையாது. அங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினரின் எண்ணிக்கையே 70 தான். அவர்களில் 90 சதவிகிதம் பெரிய ஊர்களில் வேலைசெய்து வருகிறார்கள். ஆனால் தஞ்சாவூரைத் தவிர, அந்த ஜில்லாவிலுள்ள எல்லா தாலுகாக்களிலும் கிஸான் சபை என்பது கம்யூனிஸ்ட் கட்சியோடு ஒட்டிப் பிழைக்கும் ஸ்தாபனம் அல்ல. ஆயிரக்கணக்கான விவசாயிகள் இதில் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களை தவிர, 1942 இயக்கத்தில் பங்கெடுத்துக்கொண்ட காங்கிரஸ்காரர்களும், கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் அல்லாத மற்ற பலரும் இதில் வேலை செய்துவருகிறார்கள். தமிழ்நாடு கிஸான் சபைத் தலைவரான ஸ்ரீ பூவராகன் ஒரு காங்கிரஸ்காரர்தான்.

நிலச்சுவான்தார்கள் நிறைந்த இடம் தஞ்சாவூர் ஜில்லா. பூமியின் சொந்தக்காரர்களாக இருந்து, அதை உழுது பயிரிடுபவர்களாகவும் இருப்பது அங்கு 30 சதவிகிதத்தினர்தான். ஜில்லாவைப் பொறுத்தவரையில் நிர்ணயிக்கப்பட்ட சதவிகிதம் இது. மாகாணம் முழுவதையும் எடுத்துக்கொண்டால் இது 42 சதவிகிதம் ஆகிறது. மேற்கூறிய 30 சதவிகிதத்தினரில் பெரும்பாலோர்

மிகவும் குறைவான நிலத்தையே வைத்திருப்பவர்களாக இருக்கிறார்கள்.

தவிரவும், இவை 1931ல் எடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள். கடந்த 16 வருஷங்களில் இந்த சதவிகிதம் இன்னும் குறைந்திருக்கும் என்பது நிச்சயம். ஏனெனில் விவசாயிகளின் நிலைமை வரவர மோசமாகி வந்திருக்கிறது. அதனால் கொஞ்சம் நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் மிகவும் கஷ்டத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்களிடமிருந்த நிலங்கள் கொஞ்சம் கொஞ்சமாக, வெளியூர்களிலிருந்துகொண்டு இங்கு விவசாயம் நடத்தும், நிலச்சுவான்தார்களிடம் போய்ச்சேர்ந்து வந்திருக்கிறது.

பயிரிடும் குடியானவர்களாகவும், விவசாயத் தொழிலாளராகவும் இருப்பவர்களின் எண்ணிக்கை, தஞ்சாவூரிலுள்ள மொத்த தொழிலாளரின் எண்ணிக்கையில் 60 சதவிகிதத்துக்குமேல் இருக்கிறது. மாகாணம் முழுவதையும் எடுத்துக்கொண்டாலே இது 53 சதம்தான். எனவே தஞ்சாவூர் ஜில்லாவில் இந்த சதவிகிதம் அதிகமாக இருக்கிறது. நிலமானது குத்தகை வாங்கும் சோம்பேறி நிலச்சுவான்தார்களான சிலருடைய கையில்தான் சிக்கியிருக்கிறது என்பதை மேற்படி புள்ளி விவரங்கள் நன்றாக எடுத்துக்காட்டுகின்றன.

## தமிழ்நாட்டின் களஞ்சியம் இவர்கள் கையிலா?

"தஞ்சையில் நடப்பது என்ன?" என்கிற சிறு புத்தகம் சமீபத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. குடியானவர்களின் நிலைமையைப்பற்றியும், விவசாயத் தொழிலாளிகளின் நிலைமைபற்றியும் அதில் பி. ஸ்ரீனிவாசராவ் விரிவாக எடுத்து எழுதியிருக்கிறார். அதைப்பற்றி நான் மேலும் இங்கு எழுதப்போவதில்லை. குடியானவர்களும், விவசாயத் தொழிலாளிகளும், பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்த அடிமைவாழ்வே நடத்திவருகிறார்கள் என்று கூறுவதே போதுமானது.

## குடியானவர்கள் திட்டம்

வாரம், குத்தகை ஆகியவற்றையே அடிப்படையாகக்கொண்டிருக்கிறது. வாரம்தாரரின் பங்கு 20 சதவிகிதம்தான். குத்தகை முறையாலும்கூட குடியானவனுக்கு 20 சதவிகிதத்துக்குமேல் வருவதில்லை. அதிலும் விளைச்சல் சரியாக இல்லாத வருஷத்தில் அவனுடைய கஷ்டம் சொல்லிமுடியாது. குடியானவர்களுக்கு அனுபோக பாத்தியதை (occupancy right) எதுவும் கிடையாது. மிராசுதார் நினைத்தால் அவனை எந்த நிமிஷத்திலும், "நிலத்தைப்

பயிர் செய்ய வேண்டாம்" என்று சொல்லி விரட்டிவிடலாம். பண்ணையாட்களின் கூலி எல்லாவற்றையும்விட குறைவு. 1944 டிசம்பர் முடிய பண்ணையாள் ஒருவனுக்கு அரைமரக்கால்தான் கூலிகொடுத்து வந்தார்கள். அதாவது பட்டணம் படிக்கு ஒரு படி கொடுத்தார்கள். பிறகு 1944ல் ஏற்பட்ட முக்கூட்டு ஒப்பந்தப்படி பண்ணையாளுக்கு $\frac{3}{4}$ மரக்கால் கொடுக்கப்பட்டுவந்தது. அவனுடைய கூலியை $\frac{7}{8}$ மரக்காலாக நிர்ணயிக்கவேண்டுமென்று 1946 ஜூன் மாதத்தில் மத்தியஸ்தர் தீர்ப்பளித்தார். சர்க்கார் இதை அமுலுக்குக்கொண்டுவர மறுத்துவிட்டது. பண்ணையாட்களுக்குத் தாங்கள் இருக்கும் குடிசைகளில்கூட அனுபவ பாத்தியதை கிடையாது. மிராசுதார்களின் தயவு இருக்கும்வரையில் தான் அவற்றில் அவர்கள் இருக்கலாம்.

## கிஸான் சபை ஆரம்பம்

இதைப்போன்ற நசுக்கப்பட்ட மோசமான நிலைமையை எதிர்த்துப் போராடுவதற்கும், குடியானவர், பண்ணையாட்கள், கொஞ்ச நிலங்களைக்கொண்ட விவசாயிகள் ஆகியவர்களுடைய நிலைமையை அபிவிருத்தி செய்யவும், 1943ல் கிஸான் சபை ஆரம்பிக்கப்பட்டது. அதிக உணவு உற்பத்தி, ஒழுங்கான முறையில் ரேஷன் திட்டம் வேலை செய்வது, குத்தகை (rent) குறைப்பு நியாயமான குத்தகை நிர்ணயம், பண்ணையாட்களின் ஜீவனத்துக்குப் போதுமான கூலி நிர்ணயம், மிகச்சிறிய அளவுள்ள நிலங்கள் வைத்திருப்பவர்களுக்கு நிலவரி ரத்து முதலியவைகளுக்காகவே கிஸான் சபை முக்கியமாக கிளர்ச்சி செய்து வந்தது. இவற்றில் புதியது எதுவுமில்லை. இவை எல்லாம் காங்கிரஸின் தேர்தல் விக்ஞாபனத்தில் இருக்கின்றன, காங்கிரஸ் மந்திரிகள் பதவி ஏற்று ஒரு வருஷம் ஆகிறதென்றாலும்கூட, ஏழைக் குடியானவர்களின் நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. அதற்கு பதிலாக அவர்கள்மீது அடக்குமுறை திட்டங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் உண்ண உணவு கேட்டால், துப்பாக்கிப் பிரயோகங்கள்தான் அவர்களுக்கு கிடைக்கின்றன. இந்த பலாத்காரச் செயல்களுக்கு சப்பைக்கட்டு கட்டுவதற்காக, ஆயிரக்கணக்கானவர்கள் ஊர் ஊராகச் சென்று சூறையாடினார்கள் என்று பிரகாசம் சாதிக்கிறார்.

தஞ்சாவூர் ஜில்லா பாழாகிவிட்டது என்று கூறும்போது ஸ்ரீ பிரகாசம் சில விஷயங்களுக்கு பதிலளிக்கத் தவறிவிட்டார். மிராசுதார்களையும், சர்க்காரையும் தவிர, தஞ்சாவூர் ஜில்லா இப்படி பாழ் ஆனதற்கு யார் காரணம்? இது சம்பந்தமாக சில முக்கிய விஷயங்களை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

## கோனேரிராஜபுரத்தில் யார் காரணம்?

கோனேரிராஜபுரத்திலுள்ள ஆயிரக்கணக்கான ஏகர்கள் பெரிய பெரிய மிராசுதார்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன. இவர்கள் தங்களுடைய ஆட்களை இங்கு வைத்துவிட்டு, வேறு எங்கெங்கேயோ இருந்து லேவாதேவி செய்து வருகிறார்கள். குடியானவர்களுக்கு 20 சதவிகிதம்தான் வாரம்கிடைத்து வந்தது. வாழ்க்கை நிலை இப்போது ஒன்றுக்கு ஐந்தாக உயர்ந்துவிட்டது. விவசாயக் கூலிகளும், விவசாயத்துக்கு வேண்டிய மற்ற சாமான்களும்கூட இப்போது கள்ளமார்க்கெட்டிலேயே அவர்கள் வாங்க வேண்டியிருக்கிறது. எனவே கிஸான்கள் $33\frac{1}{3}$ சதம் வாரம் வேண்டுமென்று கேட்டார்கள். இந்த குறைந்தபட்சக் கோரிக்கையைக்கூட மிராசுதார்கள் நிராகரித்தனர். ஸ்ரீ ராகவ மேனன் 27-6-46 அன்று கோனேரிராஜபுரம் வந்தார். குடியானவர்களின் கோரிக்கைக்கு ஆதரவு அளிப்பதற்குபதிலாக, அங்கு வந்திருந்த 3 ஆயிரம் குடியானவர்களுக்கு தர்மோபதேசம் செய்தார். "மிராசுதார்களுக்கு அதிகப் பங்கு கிடைக்கவேண்டியது அவசியம்தான். கல்யாணம் முதலிய வைபவங்களின்போது அவர்கள் அதிகப் பணம் செலவழிக்கவேண்டியதாக இருக்கிறது. நீங்கள் அந்த விஷயங்களில் கொஞ்சந்தான் செலவழிக்கிறீர்கள். எனவே குறைந்த பங்கு உங்களுக்குக் கிடைத்தால் போதும்" என்று ராகவ மேனன் உபதேசம் செய்தார்.

மிராசுதார்கள் 1938ம் வருஷத்தில் காங்கிரஸ் கொடியைக் கிழித்தவர்கள். விவசாயிகள் கடன் மசோதாவை நிறைவேற்றியதற்காக ராஜாஜி சர்க்கார்மீது ஆத்திரங்கொண்டதனால், காங்கிரஸ் கூட்டங்களை அவர்கள் கலைத்து கலாட்டா செய்தனர். அந்த மசோதா அவர்களை நேரடியாக பாதித்தவை. மிராசுதார்கள் அப்படியெல்லாம் செய்தார்கள். அதே மிராசுதார்களைத்தான் ராகவ மேனன் ஆதரித்தார். அவர்கள் இன்று காங்கிரஸில் சேர்ந்துவிட்டார்கள் என்பது உண்மைதான். ஆனால் தேசபக்தி மிதமிஞ்சிப் போனதால் அவர்கள் காங்கிஸில் சேரவில்லை. கிஸான்களை எதிர்த்துப் போராடுவதற்கும் காங்கிரஸ் தலைவர்களுக்கு கம்யூனிஸ்ட்களின் மீதுள்ள வெறுப்பை தங்களுக்கு சாதகமாக உபயோகித்துக்கொள்வதற்காகவும்தான் அவர்கள் காங்கிரஸில் சேர்ந்தார்கள். நீடாமங்கலத்தில் 28-6-46ல் ஒரு முக்கூட்டு மகாநாடு நடைபெற்றது. கிஸான் சபை பிரதிநிதிகள் தங்களுடைய கோரிக்கையை $27\frac{1}{2}$ சதவிகிதமாகக் குறைத்துக்கொள்ள சம்மதித்தனர். மந்திரிகளின் பக்கபலத்தைக்கொண்ட மிராசுதார்கள் இதையும்கூட கொடுக்க மறுத்துவிட்டனர். எனவே தகராறு ஓயவில்லை. இதற்குள் விதைக்கவேண்டிய காலம் வந்துவிட்டது.

நிலம் தரிசாகக் கிடக்கக்கூடாது என்ற எண்ணத்துடன், குடியானவர்கள் நிலத்தை உழ ஆரம்பித்தார்கள். 1-8-46 அன்று உழவு தொடங்கியது. உடனே சுமார் 60 குடியானவர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் 11-8-46ல், ஜில்லாக் கலெக்டரின் தலையீட்டின் பேரில் ஒரு சமரஸம் ஏற்பட்டது. மிராசுதார்கள் 27½ சதவிகிதம் கொடுக்க ஒப்புக்கொண்டனர். இந்த சமரஸம் சற்று முன்னால் ஏற்பட்டிருந்தால் விவசாயம் சரியானபடி நடந்திருக்கும்; பயிர்களும் வீணாகியிருக்காது. குடியானவர்களின் நியாயமான கோரிக்கைகளை மிராசுதார்களும், சர்க்காரும் பூர்த்தி செய்யாததால் பயிர்கள் நாசமாகிவிட்டன.

மற்றொரு உதாரணம் பின்வருமாறு:—

மாயவரம் தாலூக்காவிலுள்ள அனந்தநல்லூர் என்பது கும்பகோணத்தைச் சேர்ந்த கனகசபை செட்டியாருக்கு சொந்தமானது. குத்தகை (rent) பளுவைத் தாங்கமுடியாமல் அங்கிருந்து கிஸான்கள் ஓடிப்போய் விட்டபடியால், சுமார் 80 ஏக்கர் நிலம் பயிரிடப்படாமல் கிடந்தது.

இதைப்போன்ற உதாரணங்கள் எவ்வளவோ சொல்லலாம். "நிலத்தைத் தரிசுபோட்டாலும் போடுவோமே ஒழிய குடியானவர்களின் கோரிக்கைகளைக் கொடுக்கமாட்டோம்" என்பதுதான் மிராசுதார்களின் கொள்கையாக இருந்து வருகிறது.

## மிராசுதார் ராஜ்யம்

ஆயிரக்கணக்கானவர்கள் கூட்டமாகச் சென்று, அந்தப் பகுதி முழுவதிலும் கொள்ளையடித்தனர் என்பது பிரகாசத்தின் அடுத்த குற்றச்சாட்டு. இதில் விவரங்கள் எதுவும் அவர் கூறவில்லை. யார் யாரைக் கொள்ளையடித்தார்கள் என்பதற்கு சில உதாரணங்கள் கொடுக்கிறேன்.

1. மூலங்குடி அய்யர் ஒரு பெரிய மிராசுதார். 30-4-46ந் தேதியன்று அவர் சுமார் 100 காலிகளை அமர்த்தி, வெண்குடி கிராமத்திலுள்ள சேரியை தாக்கும்படி கூறினார். அவர் ஆரம்பித்த விவசாய முன்னேற்ற சங்கத்தில் சேருவதற்கு அந்த ஹரிஜனங்கள் மறுத்ததே இதற்குக் காரணம். அவர் அமர்த்திய காலிகள் சேரியில் புகுந்து, அதைக் கொள்ளையடித்தனர். பெண்களை துன்புறுத்தினர். குழந்தைகளுக்குக்கூட அவர்கள் கொடுமை செய்தார்கள்.

ஸ்ரீ அய்யர் ஒரு காங்கிரஸ்காரர். ஒரு வேளை இதெல்லாம் அஹிம்ஸையில் சேர்ந்ததோ, என்னவோ, நமக்குத் தெரியாது. அன்றைக்கு அந்த வழியாக திருவாரூர் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்

அகஸ்மாத்தாகச் சென்றார். அவர் குற்றவாளிகளைக் கைது செய்து, அவர்கள் மீது ஒரு வழக்கும் பதிவு செய்தார். இந்த வழக்குகள் என்ன ஆயிற்று என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

2. நீடாமங்கலம் மகாநாட்டில் மந்திரிகளின் மனோபாவம் என்னவென்பது வெட்டவெளிச்சமாகிவிட்டது. உடனே அதற்கு சில நாட்களுக்குப்பிறகு 50 காலிகள் கந்தசாமியின் வீட்டைத் தாக்குவதற்காக மணலிக்கு 7-8-46ல் வந்தார்கள். அங்கு வந்த போலீஸ்காரர்களையும் இந்த காலிகள் விடவில்லை. எனவே அந்த போலீஸ்காரர்களும்கூட கந்தசாமியின் வீட்டில் சென்று பதுங்கவேண்டியதாயிற்று. அத்திவெட்டி சாமியப்பா என்பவர் தான் இந்தக் காலிகளின் தலைவர். இவர் காங்கிரஸ் எம். எல்.ஸி. யும், பெரிய மிராசுதாருமான கே. எம். தேசிகருக்கு மிகவும் வேண்டியவர். போலீஸார் ஒரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை.

3. இந்த சமயத்தில்தான் கோட்டூரில் ஒரு விவசாயி கொலை செய்யப்பட்டான். ஆனால் இது சம்பந்தமாகவும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. மிராசுதார்களால் கூலிக்கு அமர்த்தப்பட்ட ஆட்கள் இந்தக் கொலையை செய்து விட்டு தண்டனை பெருமல் தப்பிவிட்டனர்.

4. குறுவை நெல் விஷயத்தில் மணங்கு ஒன்றுக்கு ரூ. 2 போனஸ் தருவதாக சர்க்கார் வாக்களித்தது. இந்த போனஸ், நிலத்தை உழும் விவசாயிக்குத்தான் போகவேண்டுமென்று கிஸான் சபை கிளர்ச்சி செய்தது. இந்த சமயத்தில், அதாவது 2-10-46-ல், கூட்டம் ஒன்றுக்குச் சென்றுகொண்டிருந்த விவசாயிகள் ஊர்வலத்தை மிராசுதார்களின் ஆட்கள் தாக்கினர். சுமார் 17 பேர் இதில் காயம் அடைந்தனர். போலீஸார் இப்போதும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை.

5. பாபநாசம் தாலுகாவில் முன்னியூர் என்ற கிராமம் இருக்கிறது. வீரய்யாவாண்டையார் என்பவர் இதன் சொந்தக்காரர். இவர் காங்கிரஸ் எம்.எல்.ஏ. கிருஷ்ணசாமி வாண்டையாரின் சகோதரர். விவசாயிகளில் பெரும்பாலோர் அவருடைய ஜாதியையே சேர்ந்தவர்கள். அப்படியிருந்தும் விவசாயிகளின் குடிசைகளை நாசமாக்குவதற்காக அவர் ஹரிஜனங்களை அமர்த்தினர். அந்த விவசாயிகள் கிசான் சபையில் சேர்ந்துவிட்டதே இந்த தாக்குதலுக்கு காரணம். கீழ்த்தரமான இந்த வேலையைச் செய்வதற்கு ஹரிஜனங்கள் மறுத்துவிட்டார்கள். இது 1946 டிசம்பரில் நடந்தது. 9-1-47 அன்று, சாலியமங்கலத்திலிருந்தும்,

பூண்டியிலிருந்தும் சில ஆட்களைக் கூலிக்குப் பிடித்து, அவர்களுக்குக் கள்ளையும் வாங்கிக்கொடுத்து, முன்னியூர் விவசாயிகளைத் தாக்கும்படியாக வீரய்யா வாண்டையார் கூறினர். விவசாயிகள் அவர்களிடம் விஷயத்தைக் கூறி வேண்டிக்கொண்டதும், தாக்க வந்தவர்கள் போய்விட்டார்கள். எனவே இதுவும் நடக்கவில்லை.

10-1-47-ல் மற்றொரு முயற்சி நடந்தது. இதிலும் மிராசுதார்கள் வெற்றிபெறவில்லை. இதற்குப் பிறகு கிஸான் ஊழியராகிய தோழர் ராமசாமி 157வது செக்ஷன்படி கைதுசெய்யப்பட்டார். மாதம் 3 ஆகியும், இன்னும் அவரை ரிமாண்டில் வைத்திருக்கிறார்கள். ஜாமீனில் விடக்கூடிய பிரிவின்படி அவர் 17-2-47ல் கைது செய்யப்பட்டிருந்தபோதிலும்கூட, அவரை ஜாமீனில்விட மறுத்துவிட்டார்கள்.

சீயாழி தாலூகாவில் தேனூர் பிர்க்காவைச் சேர்ந்த கிஸான் ஊழியர் கே. சாமிதுரையை, மிராசுதார் ஆட்கள் நள்ளிரவில் வந்து தாக்கினார்கள். இதுவரையில் இது சம்பந்தமாகவும் நடவடிக்கை எதையும் எடுத்துக்கொள்ளவில்லை.

7. வெங்காத்தகுடி, கோவில்கலம்பல், குரிச்சிமூலை, பத்தம்கடை முதலிய கிராமங்களில் விவசாயிகள் பயிரிட்ட நெல்லை மார்ச்சு மாத முதல் வாரத்தில், வெளியிடங்களிலிருந்து அழைத்து வரப்பட்ட 500 ஆட்களின் உதவியுடனும், போலீஸ் பந்தோபஸ்துடனும் அறுவடை செய்தனர். விவசாயிகளுக்குத் தரவேண்டிய நெல்லையும் அவர்கள் கொடுக்க மறுத்துவிட்டனர். மன்னார்குடி பெரிய மிராசுதார் பாலகிருஷ்ண முதலியார்தான் இப்படிச் செய்தார்.

8. நெடும்பலத்தில் விவசாயிகள் பயிரிட்டிருந்த நெல்லை வெளியூரிலிருந்து வந்த 200 காலிகள் உதவியால் ராவ்பகதூர் சாமியப்ப முதலியார் அறுவடை செய்து, சாகுபடி முழுவதையும் எடுத்துக்கொண்டார். குடியானவர்களுக்குச் சேரவேண்டிய நெல்லை அவர் கொடுக்கவில்லை.

## கரந்த் அறிக்கை

தஞ்சாவூர் ஜில்லாவில் ஸ்ரீ கே. ஆர். கரந்த் சுற்றுப் பிரயாணம் செய்தது உண்மைதான். வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, கும்பகோணம், மாயவரம் முதலிய இடங்களுக்கு அவர் சென்றார். திருத்துறைப்பூண்டியிலும், கும்பகோணத்திலும் பொதுக்கூட்டங்களில் அவர் பேசினார். ஒவ்வொரு இடத்திலும் மிராசுதார்கள் வீடுகளில் விருந்து சாப்பிட்டு, அவர்களுடன் பிரயாணம் செய்து, அவர்கள் சொல்லச் சொன்னதை

கிளிப்பிள்ளையைப்போல் அவர் சொல்லி வைத்தார். அவர் சென்ற இடங்களில் விசாரணை செய்யும்படி நான் அவருக்கு சவால் விடுகிறேன்.

## யாரை யார் இழிவுபடுத்தினார்கள் ?

அடுத்த குற்றச்சாட்டு என்னவென்றால், சமரஸம் ஏற்படுத்த வந்தபோது மந்திரியை ஒரு கம்யூனிஸ்ட் தலைவர், இழிவாகப் பேசினார் என்பதுதான்.

அது ஒரு பெரிய கதை. காங்கிரஸ் மந்திரிகள் பதவி ஏற்ற பிறகு, தஞ்சாவூர் ஜில்லா ஜட்ஜ் ஒருவரை மத்தியஸ்தராக நியமித்தனர். மிராசுதார்களுக்கும் கிஸான்களுக்கும் இடையில் நடந்து வந்த தகராறு சம்பந்தமாக, மிராசுதார்கள் மந்திரிகளைப் போய் பார்த்தனர். இந்த தகராறில் மத்தியஸ்தம் செய்துவைப்பதற்காகவே ஷை ஜில்லா ஜட்ஜ் நியமிக்கப்பட்டார். இந்த தகராறில் சம்பந்தப்பட்ட கட்சிகளில் ஒன்றாகிய கிசான் சபையைக் கலந்து கொள்ளாமலே இந்த நியமனம் நடைபெற்றது.

ஜட்ஜ் 17-6-46 அன்று பின் கண்டபடி தீர்ப்பளித்தார் :—

1. கிசான் சபையில் சேராததற்காக விவசாயிகளை நிலத்திலிருந்து மிராசுதார்கள் விரட்டக்கூடாது. கிசான் சபை சட்ட பூர்வமாக வேலைசெய்துவரலாம்.

2. அவ்வப்போது ஏற்படும் தகராறுகளை தீர்த்துவைப்பதற்காக பின்கண்டவர்களைக் கொண்ட ஒரு கமிட்டி அமைக்கப்படும்: (1) குன்னியூர் சாம்பசிவ அய்யர், (2) ஏ. சீனிவாச அய்யங்கார் (3) குப்பையா முதலியார், (4) மணலி கந்தசாமி (5) கெ. பி. நடராஜன் (6) வி. சாமிநாதன்.

3. இந்த கமிட்டியால் தீர்க்க முடியாத தகராறுகளை தீர்ப்பதற்கு மன்னார்குடி ஜில்லா முன்சீப் மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டார்.

4. சமரஸ கமிட்டியின் உத்திரவன்னியில், ஒருவரையும் நிலத்திலிருந்து வெளியேற்ற முடியாது. குத்தகை முறையையும் (System of tenure) மாற்றியமைக்க முடியாது; நிலத்தை மாற்றவோ, வேறு ஒருவருக்குக் கொடுக்கவோ, முடியாது. வெளியிலிருந்து பண்ணை ஆட்களைக் கொண்டுவரவும் முடியாது, சமரஸ கமிட்டி உத்திரவின் பேரில்தான் இவற்றை எல்லாம் செய்யலாம்.

5. பண்ணையாட்கள் கூலி $\frac{3}{4}$ மரக்காலிலிருந்து 8-ல் 7 மரக்காலாக உயர்த்தப்பட்டது.

இந்த சிபார்சுகளை இருதரப்பாரும் ஏற்றுக்கொண்டனர். ஆனால் இவற்றை அமுலுக்குக்கொண்டுவர வேண்டுமென்று

கிஸான் சபை எவ்வளவோ தடவை கேட்டுக்கொண்டபோதிலும், சர்க்கார் அப்படிச் செய்யவில்லை. இது சம்பந்தமாக தமிழ்நாடு கிஸான் சபை பொதுக்காரியதரிசி, அப்போது தொழில் மந்திரியாக இருந்த ஸ்ரீ கிரியையும், சட்ட மந்திரியாக இருந்த கே. பாஷ்யத்தையும் பார்த்துப் பேசினர். இதைப்பற்றி கவனிப்பதாக அவர்கள் வாக்களித்தனர். ஆனல் ஒன்றும் செய்யவில்லை. மந்திரி சபை இப்படி இருப்பதனல் தைரியம் கொண்ட மிராசுதார்கள், குடியானவர்களை நிலங்களிலிருந்து வெளியேற்றத் தொடங்கினர்கள். மிராசுதார்களின் முயற்சியை குடியானவர்கள் எதிர்த்தார்கள்.

இதற்குப் பிறகுதான் 28—7—46 அன்றைக்கு ஸ்ரீமான்கள் ராகவமேனனும், பாஷ்யமும் கிஸான் சபை பிரதிநிதிகளுடன் பேசுவதற்காக நீடாமங்கலத்துக்கு வந்தனர். தகராறை தீர்ப்பதற்கு ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. இதற்கிடையில் விதை விதைப்பு காலம் ஆரம்பமாகிவிட்டது.

28-ந் தேதி காலை பல கிராமங்களிலிருந்து விவசாயிகள் ஏராளமாக வந்தனர். சுமார் 20 மைலுக்கு அப்பாலிருந்துகூட பலர் வந்தனர். நீடாமங்கலத்துக்குச் செல்லும் ரஸ்தா நெடுகிலும் சுமார் 5000 குடியானவர்கள் வரிசை வரிசையாக நின்றுகொண்டிருந்தனர். "காங்கிரஸ் மந்திரிகள் வாழ்க" "தீர்ப்பை அமுலுக்கு கொண்டு வருக" என்ற கோஷங்களுடன் அவர்கள் மந்திரிகளை வரவேற்றனர்.

"மிராசுதார்கள் வாழ்க" கிஸான் சபை ஒழிக, கம்யூனிஸ்ட் கட்சி ஒழிக" என்ற கோஷங்கள் போடுவதற்காக 100 சிறுவர்களை மிராசுதார்கள் அமர்த்தியிருந்தார்கள். இந்த முறையில் அவர்களும் மந்திரிகளை வரவேற்ருர்கள்.

இரு கட்சிகளுக்கும் இடையில் உள்ள தகராரைத் தீர்ப்பதற்கு மந்திரிகள் அங்கு வந்தபோதிலும், மகாநாட்டுக்கு வருவதற்கு முன்னல் அவர்கள் சுமார் 1 மணி நேரம் முசாபரி பங்களாவில், மிராசுதார்களுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். 11 மணிக்கு ஆரம்பிப்பதாக இருந்த மகாநாட்டுக்கு அவர்கள் 12-30 மணிக்கு வந்து சேர்ந்தார்கள். மிராசுதார்களுடன் பேசியபோதே எதை, எப்படித் தீர்ப்பது என்ற விஷயங்களை முடிவு செய்துவிட்டார்களோ, என்னவோ.

மகாநாட்டுக்கு ஸ்ரீ வி. பூவராகன், பி. ஸ்ரீனிவாச ராவ், ஸி. கந்தசாமி ஆகிய மூவரும் கிஸான் சபை பிரதிநிதிகளாக வந்திருந்தனர். காங்கிரஸ்காரர்களான பல மிராசுதார்கள் வந்திருந்த போதிலும், பிரபல ஜஸ்டிஸ் கட்சி ஆசாமியும், பிரிட்டிஷ் சர்க்கார்

தாஸருமாகிய ராவ்பகதூர் சாமியப்ப முதலியார்தான் மிராசுதார்கள் சார்பாக பேசினர்.

தங்களுடைய கட்சியை முதலில் எடுத்துச் சொல்லும்படி, மகாநாட்டில் ஸ்ரீ பாஷ்யம் கூறினர்.

கிஸான் சபையின் சார்பில் ஸ்ரீ பி. சீனிவாச ராவ் பேசுகையில், மத்தியஸ்தரின் தீர்ப்பை அமுலுக்கு கொண்டுவர வேண்டுமென்று கூறினர்.

உடனே மிராசுதார்களுக்கு மிகவும் குதூகலம் அளிக்கும் ஒரு காரியத்தை ஸ்ரீ பாஷ்யம் செய்தார்: அதாவது அந்தத் தீர்ப்பை அமுலுக்குக் கொண்டுவர முடியாது என்றும் அதை ரத்து செய்துவிட வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். விஷயம் தெரியாமல் ஜில்லா ஜட்ஜ் ஏதேதோ எழுதி வைத்திருக்கிறர் என்றும், இதற்காக தம்முடைய முனிசீபை அனுப்பிவைக்க முடியாதென்றும் ஒரு போடு போட்டார்.

இந்த சந்தர்ப்பத்தில் தீர்ப்பின் விவரம் என்னவென்று ஸ்ரீ ராகவமேனன் கேட்டார்.

"நான் அதை படிக்கவில்லை" என்று பாஷ்யமும் சொன்னர்!

எப்படி இருக்கிறது விஷயம்! தங்களால் நியமிக்கப்பட்ட மத்தியஸ்தரின் தீர்ப்புக்கு மந்திரிகள் மதிப்புக் கொடுக்கவில்லை! தீர்ப்பு என்ன என்பதைக்கூட பார்க்காமல் அவர்கள் மகாநாட்டுக்கு வந்திருந்தார்கள்.

இதற்குப் பிறகு, புதிதாக வேறு சமரஸம் செய்து வைப்பதாக பாஷ்யம் சொன்னர். எப்படியாவது சமாதானமான முறையில் சமரஸம் ஏற்பட்டால் போதும் என்ற ஆவலினல், இதற்கும் கிஸான் சபை தலைவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

குடியானவர்களை வெளியேற்றும் பிரச்னைபற்றிய பரிசீலனை எழுந்ததும், ஸ்ரீ பாஷ்யத்தின் சுயரூபம் வெளியாயிற்று. மிராசுதார்களின் சட்டபூர்வமான உரிமைகளில் தலையிட முடியாது என்று அவர் வக்கீலைப்போல் வாதம் செய்தார். குடியானவர்கள், பண்ணையாட்கள் முதலியவர்களின் உயிரை மிராசுதார்களின் இஷ்டத்துக்கு விட்டுவிட வேண்டுமென்று, ஏழைகளின் ரட்சகர் ஸ்ரீ பாஷ்யம் விரும்பினர். நிலத்திலிருந்து வெளியேற்றும் விஷயத்தில் பண்ணையாட்களுக்கும், குடியானவர்களுக்கும் ஏதோ கொஞ்சம் பாதுகாப்பு மத்தியஸ்தர் தீர்ப்பில் அளிக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து பின்வாங்கிச் செல்லுவதே ஸ்ரீ பாஷ்யத்தின் சிபார்சு. கிஸான் சபை பிரதிநிதிகள் இதற்கு ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டனர். ஸ்ரீ பூவராகன் எவ்வளவோ வாதாடியும்கூட பாஷ்யம் அசைந்துகொடுக்கவில்லை.

இது இப்படி இருக்கும்போது, மந்திரிகள் மகாநாட்டை விட்டுப் புறப்பட்டுவிட்டனர். உள்ளூர் காங்கிரஸின் ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டத்துக்கு அவர்கள் போனார்கள். கம்யூனிஸ்டுகளையும், கிஸான் சபை ஊழியர்களையும் தாக்கி, இரண்டு மந்திரிகளும் அந்தக் கூட்டத்தில் பேசினர். கம்யூனிஸ்டுகளை துரோகிகள் என்றும், மற்றும் பழைய பல்லவிகளையும் அவர்கள் பாடினார்கள்.

அந்தக் கூட்டம் முடிந்தபிறகு, மகாநாடு மீண்டும் தொடங்கியது. தம்முடைய யோசனையை ஏற்கும்படி ஸ்ரீ பாஷ்யம், கிஸான் சபைப் பிரதிநிதிகளைக் கேட்டுக்கொண்டார்.

அவருடைய யோசனையை ஏற்றால், குடியானவர்களை வெளியேற்றும் விஷயத்தில் மிராசுதார்களுக்கு எதேச்சாதிகாரத்தைக் கொடுப்பதாகும் என்றும், ஒவ்வொரு கிராமத்திலும் 40 சதவிகிதமுள்ள குடியானவர்கள் வீடுவாசலின்றி நிர்க்கதியாய் நிற்பார்கள் என்றும் பி. சீனிவாச ராவ் எடுத்துக் காட்டினார். ஏற்கனவே பல மிராசுதார்கள் 400 குடியானவர்களை வெளியேற்றியிருக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

உடனே 300 அல்லது 400 பேர் இறந்தால் எனக்கு கவலையில்லை" என்று ஸ்ரீ பாஷ்யம் கத்தினார்.

பொறுப்பு வாய்ந்த ஒரு மந்திரி இப்படிப் பேசுவது தமக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது என்று பி. ஸ்ரீனிவாச ராவ் கூறினார்.

உடனே ஸ்ரீ பாஷ்யத்துக்கு ஆத்திரம் அளவுகடந்து விட்டது. கம்யூனிஸ்டுகளையும், கிசான் சபை ஊழியர்களையும் தாக்கு தாக்கென்று தாக்க ஆரம்பித்தார். "இந்த கம்யூனிஸ்டுகள் துரோகிகள். யுத்த காலத்தில் அவர்கள் யுத்த நிதி திரட்டிக் கொடுத்தனர். பிரிட்டிஷாருக்கு அவர்கள் உதவி செய்தனர்" என்று அவர் பேசினார். யுத்த நிதிக்கு ஆயிரம் ஆயிரமாகக் கொடுத்த மிராசுதார்களிடம் அவர் இப்படிச் சொன்னார். அந்த மிராசுதார்கள் தேசபக்தர்களாகவும், மற்றவர்கள் துரோகிகளாகவும் ஸ்ரீ பாஷ்யத்துக்கு தோன்றிற்று.

மிராசுதார்களுக்கு இது எல்லாம் ஆனந்தமாக இருந்தது. ஸ்ரீ சாமியப்ப முதலியார் இந்த சந்தர்ப்பத்தை சட்டென்று உபயோகித்துக் கொண்டு, தங்களுக்கு போலீஸ் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டார். ஸ்ரீ பாஷ்யம் இதற்கு உடனே ஒப்புக்கொண்டார். மகாநாடு முறிந்து விட்டது. ஒருவிதமான சமரஸமும் ஏற்படவில்லை. ஆனால் தகராறை மந்திரிகள் தீர்த்துவைத்ததாக ஸ்ரீ பிரகாசம் நினைக்கிறார்.

இதுதான் நடந்தது. யார் யாரை இழிவு படுத்தினர்கள் என்பது வாசகர்கள் முடிவு சொல்ல வேண்டிய விஷயம்.

## மிராசுதார் தாக்குதல்

மந்திரிகள் பச்சைக்கொடி காட்டிவிட்டார்கள். மிராசுதார்கள், ஏற்கனவே கூறியபடி தாக்குதலுக்கு ஆரம்பித்து விட்டனர். மீண்டும் நெருக்கடி ஏற்பட்டது. உடனே மிராசுதார்கள் மந்திரியிடம் ஓடினர்கள். இந்தத் தடவை தகராறைத் தீர்ப்பதற்கு ஜில்லா அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். ஜில்லா கலெக்டர் முக்கூட்டு மகாநாடு ஒன்றை 7—12—46ல் கூட்டினர். குத்தகையைக் குறைக்க வேண்டுமென்பதே முக்கியமான கோரிக்கை. இப்போது குடியானவர் கொடுத்து வருவதில் 10 சத விகிதத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று கிஸான் சபை கேட்டது. மிராசுதார்கள் இதற்கு உடன்பட மறுத்துவிட்டார்கள். 5 சத விகிதம் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று கலெக்டர் தீர்ப்பு அளித்தார். தங்களுக்கு இது திருப்தி அளிக்கவில்லை. என்றாலும் தகராறு வேண்டாம் என்பதற்காக கிஸான் சபை பிரதிநிதிகள் கலெக்டர் தீர்ப்பை ஏற்றனர்.

ஆனல் இதை ஒப்புக்கொண்ட மிராசுதார்கள், மறுநாள் முதலே மீற ஆரம்பித்து விட்டார்கள். வெளியூர்களிலிருந்து காலிகளை அமர்த்திக்கொண்டு வந்து, கிஸான்களை பயமுறுத்த தொடங்கினர்கள். இந்த முறையில் கிஸான்களைப் பணியவைக்க அவர்கள் முயன்றார்கள். நிரபராதிகளான இருவர் கொல்லப் பட்டதாக ஸ்ரீ பிரகாசம் கூறுகிறார்.

அவர் புகழ்ந்தபடி அவர்கள் அவ்வளவு நிரபராதிகள் அல்ல, கூலிக்கு மாரடிக்க வந்த குண்டர்கள் அவர்கள். கிராமத்தில் புகுந்து அவர்கள் விவசாயிகளைத் தாக்கினர்கள். பெண்களைத் துன்புறுத்தி அவர்களை கற்பழித்தனர். விவசாயிகளின் சொத்தைக் கொள்ளை யடித்தனர். சொல்ல முடியாத அட்டூழியங்கள் செய்தனர். இவற்றின் விளைவாக கிராமத்தினருக்கும், இந்த காலிகளுக்கும் இடையில் அடிதடி ஏற்பட்டது.

இதில்தான் இருவர் இறந்ததாகச் சொல்லுகிறார்கள்.

## காங்கிரஸின் கொடியின்கீழ் கிஸான்கள்

எல்லாவற்றையும் கம்யூனிஸ்டுகள் விஷமம் என்று பிரகாசம் சாதித்து விட்டார். மாயவரம் தாலுகாவில் இப்போது என்ன நடக்கிறது? கிஸான் காங்கிரஸ் தலைமையில் அவர்கள் திரட்டப் பட்டிருக்கிறார்கள். பல தகராறுகளும், அடிதடிகளும் அங்கு நடந்து வருகின்றன. விவசாயிகளுக்கு எதிராக மிராசுதார்களின்

காலிகள், போலீஸார் முதலியவர்கள் கூடித் தாக்குகிறார்கள். 11—4—47 "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாகி இருக்கிறது. மாயவரம் மணமேடு பிர்க்காவிலுள்ள, பூதக்குடி கிராமத்தில், காங்கிரஸ் கிஸான் சங்கத்தைச் சேர்ந்த 42 பேர்கள், மற்றும் 19 பேரும் கைது செய்யப்பட்டதாக அந்த செய்தி கூறுகிறது.

## தேசீய பத்திரிகையில் செய்திகள்

10—1—47 இந்தியன் எக்ஸ்பிரஸ் திருச்சியம்பாளம் கிராமத்திலுள்ள விவசாயிகள், அதிக வாரம் கோரி வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். பேரளம் பிர்க்காவிலுள்ள ஆத்தூர் கிராமத்திலும், சீயாழி தாலூகாவிலுள்ள வலயூரிலும் பல குடியானவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பிரதிநிதிகள் அறிக்கை

**10—1—47** இந்தியன் எக்ஸ்பிரஸ். மிராசுதார்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையிலுள்ள தகராறுகளை தீர்ப்பதற்காக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியால் அனுப்பப்பட்ட ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன் கூறுவதாவது:—

தஞ்சாவூர் ஜில்லாவில் ஏராளமான நெல் சாகுபடி நடக்கும் இடங்களில் மாயவரம் தாலூகாவும் ஒன்று. இப்போது இங்கு ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அறுவடை முடிந்துவிட்ட போதிலும்கூட, சாகுபடியில் அவரவர்களுடைய பங்கு எவ்வளவு என்பது பற்றிய தகராறு இன்னும் தீரவில்லை. இதனால் குடியானவர்கள் வந்து கதிர் அடிக்க மறுக்கிறார்கள். எனவே போரடியிலே அறுவடைசெய்யப்பட்ட கதிர் கட்டுகள் கிடக்கின்றன."

## இதற்கு என்ன காரணம்

இது, கிஸான்களின் தவறு அல்ல. மிராசுதார்களின் பேராசையே இதற்கு காரணம். இதற்கு இரண்டொரு உதாரணங்கள் கூறுகிறேன்.

மாயவரத்துக்கு அருகில் இலத்தங்குடி என்று ஒரு கிராமம் இருக்கிறது. அதில் விவசாயிகள் 100க்கு 22 கலம் வாரம் பெற்று வந்தனர். அதிக வாரம் வேண்டுமென்று இவ்வாறு அவர்கள் கேட்டனர்.

23—1—47-ல் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி வாரம் தாருக்கு கலம் 1-க்கு 2 மரக்கால் வீதம் அறுவடைக் கூலி கொடுக்க வேண்டும் என்றும், மீதியுள்ளதில் 2/3 பங்கு மிராசு தாருக்கும், 1/3 பங்கு வாரம்தாருக்கும் கொடுக்கவேண்டுமென்றும் முடிவாயிற்று. பண்ணையாட்களின் தினக்கூலியானது, ஆண்களுக்கு 1மரக்கால் என்றும், ஸ்திரீகளுக்கு 3/4 மரக்கால் என்றும், அத்துடன் அறுவடைக் கங்காணமாக பண்ணையாட்களுக்கு 2 மரக்கால் நெல் கொடுக்க வேண்டுமென்றும் நிர்ணயிக்கப்பட்டது. ஆனல் அறுவடைக்குப் பிறகு, இந்த ஒப்பந்தப்படி நடக்க மிராசுதார்கள் மறுக்கிருர்கள்.

மாயவரம் தாலூகாவில் அனந்தநல்லூர் என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கு விவசாயிகள் 50 சதவிகித வாரம் கேட்டனர். மிராசுதார்கள் 1/3 வாரம், அதாவது 33,1/3 சதவிகிதம் தருவதற்கு ஒப்புக்கொண்டனர். அறுவடை முடிந்த பிறகு, மிராசுதார்களின் ஏஜண்டுகள் ஒப்பந்தத்தை மீறினர்கள். ரகசியமாக களத்து மேட்டிலிருந்து இராவோடிரவாக நெல்லை அப்புறப்படுத்த முயற்சித்தார்கள். விவசாயிகளுக்கு இது தெரிந்தது. அவர்கள் களத்து மேட்டுக்கு ஓடி, அகற்றப்பட்ட நெல்லை மறுபடியும் களத்துமேட்டுக்கு கொண்டுவந்து சேர்த்தார்கள்.

மேற்கண்டவைகளிலிருந்து, மிராசுதார்கள்தான் சட்டத்தை அலட்சியம் செய்தார்கள் என்பது தெரியவரும். கிஸான்கள்—அவர்கள் காங்கிரஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்சரி, கிஸான்சபையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்சரி, உயிர்வாழ்வதற்கான நியாயமான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிருர்கள் என்பதும் மேற்கூறிய உதாரணங்களிலிருந்து தெரியவரும்.

இவற்றைத்தவிர, இந்தப் பிரச்னையில், இந்திய ஊழியர்சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ கே. ஜி. சிவசாமி என்ன கூறுகிருர் என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த பிரச்னை சம்பந்தமாக மகாத்மாகாந்திக்கு அவர் ஒரு அறிக்கை சமர்ப்பித்தார். ஸ்ரீ சிவசாமியை ஒரு கம்யூனிஸ்ட் என்ருே, கம்யூனிஸ்ட் ஆதரவாளர் என்ருே யாரும் சொல்லமுடியாது. இந்திய ஊழியர் சங்க அங்கத்தினர் அவர். அவருடைய அறிக்கை வருமாறு :—

1. கருமந்தன் என்ற கிராமத்தில், குட்டையிலிருந்து தண்ணீர் எடுத்ததற்காக ஒரு ஹரிஜனப் பெண்ணை அடித்தார்கள். இதுசம்பந்தமாக புகார்செய்யவந்த ஹரிஜன விவசாயிகளுக்கும் நல்ல உதை கிடைத்தது.

2. கடலங்குடி கிராமத்தில் ஹரிஜன விவசாயிகளுக்குச் சொந்தமான பசுக்களையும் மிராசுதார்கள் ஓட்டிக்கொண்டு

போய்விட்டனர். அவர்களுடைய வீட்டு சாமான்கள் நாசமாக்கப்பட்டன. கல்யாணத்துக்காக அங்குள்ள மிராசுதார் கொடுத்த பணத்தை திருப்பிக்கொடுக்கவில்லை என்பதற்காகவே இந்தக் கொடுமைகள் நடந்தன.

3. கருங்குடி கிராமத்தில் காங்கிரஸ் கூட்டத்துக்கு வந்திருந்த ஒரு விவசாயியை அடித்தனர். அதே கிராமத்தில் விவசாயிகளின் குடிசைகளை மிராசுதார்களின் கைக்கூலிகள் நாசம் செய்துவிட்டனர்.

4. ஒவ்வொரு மிராசுதாரும் காலிகளைப் பணம்கொடுத்து அமர்த்தி வீட்டில் வைத்துக்கொண்டிருக்கிறார். கிஸான்களைத் துன்புறுத்துவதே இந்த காலிகளின் நோக்கம்.

5. வெளியூர்களிலிருந்து ஆட்களை மிராசுதார்கள் அழைத்து வருகிறார்கள். பயிரிட்ட குடியானவனுக்குத் தெரியாமல், பயிர்களை அந்த மிராசுதார்கள் கையாட்களின் உதவியால் அறுவடை செய்துவிடுகிறார்கள். இப்படி அறுவடையான நெல் எல்லாவற்றையும் தங்களுடைய வீடுகளுக்கே மிராசுதார்கள் கொண்டு போய்விடுகிறார்கள்.

6. பண்ணையாட்கள் ஆடுமாடுகளைவிடக் கேவலமாக நடத்தப்படுகிறார்கள்.

7. பல இடங்களில் விவசாயிகளை மிராசுதார்கள் சவுக்கினால் அடிக்கின்றனர்.

8. கிஸான்கள்மீது மிராசுதார்கள் பல பொய்வழக்குகள் தொடர்ந்திருக்கின்றனர்.

உண்மை இப்படி இருக்க, பழுத்த காங்கிரஸ்வாதியாகிய ஸ்ரீ வேதரத்தினம் பிள்ளை, பிப். 26ந்தேதியன்று அவசரச்சட்டத்தை ஆதரித்துப் பேசுகையில், எதிர்கட்சியை மிகைப்படுத்திக் கூறியது மிகவும் வருந்தத்தக்கது, ஒரு மிராசுதார் வீட்டில் மட்டும் 10 ஆயிரம் மூட்டை (அதாவது 20 ஆயிரம் கலம்) நெல் கொள்ளைபோயிற்று என்றால், இந்த அவசரச் சட்டத்தை ஒரு வரப்பிரசாதமாகத் தாம் வரவேற்பதாகவும் அவர் அன்று சட்டசபையில் பேசினார்.

மார்ச் 31ந் தேதியன்று ஸ்ரீ வேதரத்னம் கேள்விக்கு பதிலளிக்கையில், உள்நாட்டு மந்திரி டாக்டர் சுப்பராயன், "நெல்லை திருடியதாகவும், கொள்ளையடித்ததாகவும் சுமார் 50 கேஸ்கள் வந்திருக்கின்றன. 1177 கலம் நெல் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. இதில் 253 கலம் நெல் மீண்டும் கைப்பற்றப்பட்டிருக்கிறது" என்று கூறினார்.

NADU ARCHIVES

ஒரே ஒரு இடத்தில் கொள்ளையடித்ததாக ஸ்ரீ வேதரத்தினம் பிள்ளை கூறிய அளவுக்கும், 50 இடங்களில் கொள்ளையடித்ததாக டாக்டர் சுப்பராயன் கொடுத்த அளவுக்கும் வித்தியாசத்தைப் பாருங்கள். கம்யூனிஸ்டுகள்மீது ஸ்ரீ வேதரத்தினம் பிள்ளைக்கு உள்ள வெறுப்பினால், தமக்கு வந்த செய்தி எவ்வளவுதூரம் உண்மை என்பதைக்கூட அவர் அறிந்துகொள்ள முயற்சிசெய்ய வில்லை. மிராசுதார்தள் அவரிடம் என்னசொன்னார்களோ, அதை அப்படியே நம்பிவிட்டார். காந்திய முறையைப் பின்பற்றும் காங்கிரஸ்காரருக்கு இது தகுமா? இதைப்போன்ற மிகைப்படுத் தப்பட்ட அறிக்கைகளை வைத்துக்கொண்டுதான் கம்யூனிஸ்டுகள் மீதும், கிஸான்கள்மீதும் ஸ்ரீ பிரகாசம் குற்றம் சாட்டியிருக்கிறார்.

தஞ்சாவூர் ஜில்லாவில் ஹரிஜனங்கள், சாதாரணமாய் நட மாடக்கூட முடியாத நிலைமையை கம்யூனிஸ்டுகள் ஏற்படுத்திவிட் டார்கள் என்று அவசரச் சட்டத்தை ஆதரித்துப் பேசிய ஸ்ரீ வி. ஐ. முனிசாமி பிள்ளை கூறினார். நிலச்சுவான்தாருக்கும் குடியான வர்களுக்கும் இதுவரையில் இருந்த நல்லுறவுக்கு பரஸ்பர சிநேக மும், நல்லெண்ணமுமே அடிப்படையான காரணங்கள். இவற்றை வீணாக்கும்முறையில் கம்யூனிஸ்டுகள் நடந்துகொண் டது தமக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது என்றும், மேற் கூறிய சினேகமும் நல்லெண்ணமும் மீண்டும் ஏற்படுமா என்பது சந்தேகமாக இருக்கிறதென்றும், கம்யூனிஸ்டுகள் கூறுவதுபோல் நிலச்சுவான்தார்களில் பெரும்பான்மையோர் கல்நெஞ்சம் படைத்தவர்கள் அல்லவென்றும் ஸ்ரீ முனிசாமிப் பிள்ளை சட்ட சபையில் பேசினார். குடியானவர்களின் க்ஷேமத்தை கவனிப்ப தில் மிராசுதார்கள் அக்கரை காட்டுகிறார்கள் என்றும், பலவிதங் களிலும் ஒத்தாசை செய்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

கம்யூனிஸ்டுகள்மீது அவருக்கு உள்ள வெறுப்புகளை சற்று தூரவிலக்கி வைத்துவிட்டு, உண்மை என்ன என்று பார்க்கட்டும். அப்படிப்பார்த்தால் ஒரு விஷயம் அவருக்குத் தெளிவாகத் தெரி யும். தஞ்சாவூர் ஜில்லாவில், ஹரிஜனங்கள் சாதாரணமாக நட மாடக்கூட முடியாதபடி செய்தவர்கள் கம்யூனிஸ்டுகள் அல்ல என்றும், கல்நெஞ்சம் படைத்தவர்கள் அல்லவென்று ஸ்ரீ முனி சாமி பிள்ளை கூறிய அதே மிராசுதார்கள்தான் அப்படிப்பட்ட நிலைமைக்குக் காரணம் என்றும் அவர் அறிந்துகொள்ளுவார். காந்திஜிக்கு ஸ்ரீ கே. ஜி. சிவசாமி அனுப்பியுள்ள அறிக்கையைப் படித்துவிட்டு, முனிசாமி பிள்ளையே முடிவுசெய்யட்டும். தம்மி டம் நடந்துகொள்ளுவதைப்போல் மற்ற ஹரிஜனங்களிடமும் மிராசுதார்கள் நடந்துகொள்ளுகிறார்கள் என்று ஸ்ரீ முனிசாமி பிள்ளை நினைக்கக்கூடாது. அவரிடம் காட்டும் மரியாதையை,

அவருடைய ஜாதியினரிடமும் மிராசுதார்கள் காட்டுவதாக அவர் எண்ணக் கூடாது. பச்சையாகச் சொல்லவேண்டுமானால், ஸ்ரீ பிள்ளைக்கு கௌரவமும் மரியாதையும் கொடுக்கும் இதே மிராசுதார்களில் சிலர் தான் ஹரிஜனங்களை மிகவும் கொடுமையாக நடத்துகிறவர்கள் என்பதில் சந்தேகமில்லை.

## ராமநாதபுரத்தில்

ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள வத்ராயிருப்பில் நடந்ததைப் பற்றிப் பேசுகையில், வழக்கமான கதையையே ஸ்ரீ பிரகாசம் கூறினார். ஆயிரக்கணக்கானவர்கள் சென்று, நிலச்சுவான்தார்களின் நிலங்களை பலவந்தமாக ஆக்கிரமித்துக்கொண்டு, உழுது பயிரிடுவதற்கு சொந்தக்காரர்களுக்கு உள்ள உரிமையை மறுத்து அநியாயம் செய்தார்கள் என்று ஸ்ரீ பிரகாசம் தெரிவித்தார்.

## வத்திராயிருப்பில் நடந்தது என்ன ?

ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகாவில் வத்திராயிருப்பு பிர்க்கா மிகவும் வளம்பொருந்திய, நெல் சாகுபடிப் பிரதேசம். குளப் பாசனத்தின்மூலமாக அங்கு சாகுபடி நடக்கிறது. நிலங்களில் 9/10 பங்கு, வெளியூர்களில் சுகவாஸம் செய்துகொண்டு, இங்கு நிலம் மாத்திரம் வைத்துக்கொண்டிருக்கும் நிலச்சுவான்தார்கள் கையிலிருக்கிறது. பெரும்பாலும் ஜாதி ஹிந்துக்களும், ஹரிஜனக் குடியானவர்களும்தான் இங்கு வாரத்துக்கு சாகுபடிசெய்கிறார்கள். உற்பத்தியில் குடியானவர்களுக்கு 1/3 பங்கும், நிலச்சுவான்தார்களுக்கு 2/3 பங்கும் கொடுப்பது என்பதுதான் விகிதம். இந்த 1/3 பங்குகூட, அப்படியே குடியானவர்களுக்கு வருவதில்லை. சட்டவிரோதமான 5 வகை வரிகளை மிராசுதார்கள் வசூலித்து வந்தார்கள். எனவே 30 சதவிகிதத்துக்குமேல் குடியானவன் கைக்குப்போய்ச் சேர்ந்ததே கிடையாது. ரொம்ப நல்ல நிலங்களில் 7 அல்லது 8 பொதி நெல் விளையும். சில சமயங்களில் இது 3 பொதியாகவும் குறைந்துவிடும். (ஒரு பொதி என்பது, பட்டணம் படிக்கு 120 படி). ஏக்கர் ஒன்றுக்கு சராசரி விவசாயச் செலவுகள் ரூ. 75 ஆகிறது. மிராசுதார்களே இதை நியாயமான மதிப்பு என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். யுத்தமும், அதனால் ஏற்பட்டுள்ள நிலைமையும், பொருள்களின் விலையேற்றமும் விவசாயிகளின் வாழ்க்கையை சகிக்கமுடியாத கஷ்டத்துக்கு உள்ளாக்கிவிட்டன. எனவே 1946 பிப்ரவரி அறுவடையின்போது, விளைச்சலில் பாதியை வாரமாகக் கொடுக்கவேண்டுமென்று விவசாயிகள் கேட்டார்கள். முதலில் மிராசுதார்கள் இதை மறுத்தனர். பிறகு 40 சதவிகிதம் கொடுக்க ஒப்புக்கொண்டனர். இது விவசாயிகளுக்கு திருப்தி அளிக்கவில்லை.

மேற்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து, 50 சதவிகித வாரம் பெற்ருலும்கூட, அது விவசாயிகள் செய்யும் செலவுக்குத்தான் சரியாக இருக்கும் என்பது தெளிவாகிறது. ஆனல் தற்காலிகமாக கிஸான்கள் இதை ஏற்றனர்.

## குமாரசாமி ராஜாவுக்கு கிஸான்சபை யாதாஸ்து

கிசான்சபை 30-5-46ல், மந்திரியாக இருந்த ஸ்ரீ குமாரசாமி ராஜாவிடம் ஒரு யாதாஸ்தை சமர்ப்பித்தது. இந்த தகராறில் சர்க்கார் தலையிட்டு, ஒரு சமரஸம் செய்துவைக்கவேண்டும் என்று இதில் கிசான் சபை கேட்டிருந்தது. சிவகாசியிலுள்ள R. D. O. விடம் இந்த வேலையை ஸ்ரீ ராஜா ஒப்படைத்தார். மிராசுதார்கள் இதற்கிடையில் தங்களுடைய முறைகளை மாற்றிக் கொண்டுவிட்டனர். வாரத்துக்கு நிலங்களை விடமுடியாது என்று அவர்கள் சொல்லிவிட்டனர். தலைமுறை தலைமுறையாக இருந்து வந்த, இந்த வாரம்முறைக்கு பதிலாக, குத்தகைக்குத்தான் நிலங்களை விடமுடியும் என்று அவர்கள் கூறினர்கள். இது பளுவை குடியானவன் தலைமீது சுமத்துவதாகும். விளைச்சல் உண்டோ, இல்லையோ, குறிப்பிட்ட அளவு நெல்லை மிராசுதாரிடம் கொண்டு போய் அளந்துவிடவேண்டும். இதற்கு கிசான்சபை ஒப்புக் கொள்ளமுடியவில்லை. R.D.O. சமரஸம் செய்துவைக்க முயற்சி செய்தார். மிராசுதார்கள் கொஞ்சம்கூட அசைந்துகொடுக்காததால், அவருடைய முயற்சி பலிக்கவில்லை. கிசான்சபை பிரதிநிதிகளும் இது சம்பந்தமாக அதிகாரிகளைப் பல தடவைகள் சென்று பார்த்தனர். ஒன்றும் நடக்கவில்லை.

## தரிசுபோட விவசாயிகள் ஒப்பவில்லை

எரு அடிக்கவேண்டிய காலம் நெருங்கியது. ஆனல் சமரசம் எதுவும் ஏற்படவில்லை. எனவே, 1946 ஆகஸ்ட் 15-ந் தேதியன்று, விவசாயிகள் நிலங்களுக்கு எரு அடிக்கத் தொடங்கினர்கள். எதிர்காலத்தில் ஏதாவது ஒருவித சமரசம் ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கையாலும், நிலத்தை தரிசுபோடக்கூடாது என்ற எண்ணத்தினலும் அவர்கள் இப்படிச் செய்தார்கள். கிஸான்களுடன் சமரசம் செய்துகொள்ளும்படி மிராசுதார்களுக்கு உத்திரவிட விரும்பாத அதிகாரிகள், இப்போது ரொம்ப சுறுசுறுப்பாக, மிராசுதார்களின் உதவிக்கு வந்தார்கள். சுமார் 100 விவசாயிகள் கைது செய்யப்பட்டனர். பிறகு, அவர்களில் முக்கியமான ஆட்கள்மீது, ஆக்ரமிப்பு (trespass) குற்றத்துக்காக வழக்குகள் தொடரப்பட்டன. அந்த வழக்குகள் இன்

னும் நடந்துவருகின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால், 11-9-46 அன்றைக்கு ஜில்லா கலெக்டரும், போலீஸ் சூபரின்டெண்டும் வத்திராயிருப்புக்கு வந்து குத்தகைக்கு விவசாயம் செய்ய ஒப்புக்கொள்ளுபவர்களுக்கு போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று கூறியதுதான். எனவே மிராசுதார்களின் கோரிக்கைகளுக்குத்தான் அதிகாரிகள் உண்மையில், ஆதரவு அளித்தனர். இந்த திட்டத்தை ஏற்றுக்கொண்டால் விவசாயிகளின் கதி அதோகதியாகிவிடும் என்பதனால், கிஸான்கள் அதை ஏற்கவில்லை. நவம்பர் 15-ந் தேதிக்குள் குளங்களில் நீர் நிறைந்துவிட்டது. விதை விதைக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. ஆனால் தகராறு தீரவில்லை. "எங்களுடைய திட்டத்தை ஒப்புக்கொள்ளுங்கள். இல்லையானால் நிலங்களை தரிசாகப் போட்டுவிடுவோம்" என்பது மிராசுதார்களின் சுலோகமாக இருந்தது. நிலத்தை தரிசாகப் போட்டுவிடக்கூடாது என்பதனால் விவசாயிகள் நிலத்தை உழுதனர். உடனே போலீஸார் அவர்களைக் கைதுசெய்தனர். அவர்களுடைய வழக்கு இன்னும் நடந்துவருகிறது. போலீஸார் இத்துடன் நிற்கவில்லை. உள்ளூர் காங்கிரஸ் தலைவர்களில் சிலருடைய உதவியைக் கொண்டு, ஒரு ஒப்பந்தத்தை சில விவசாயிகள் தலையில் வைத்துக் கட்டினார்கள். இந்த ஒப்பந்தத்துக்கு ஒப்புக்கொள்ளவில்லையானால், அவர்களுடைய வீடுகளைக் கொளுத்திவிடுவதாக ஷை விவசாயிகளை பயமுறுத்தினார்கள். தமிழ்நாடு கிசான்சபை காரியதரிசிகளான பி சீனிவாஸ ராவ், சி. கந்தசாமி ஆகியவர்கள் முன்னிலையில் ஒரு சமரசம் ஏற்பட்டதாக பத்திரிகைகளுக்கும் அவர்கள் செய்தி அனுப்பினர். இந்த விவசாயிகள்மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெறுவதாக போலீஸார் வாக்குறுதி அளித்தனர். ஆனால் அதன்படி அவர்கள் நடக்கவில்லை. கிசான் தலைவர் அருணசல தேவர் சிவகாசியில் காவலில் வைக்கப்பட்டார்.

## தலையிட மந்திரிசபை மறுப்பு

இந்த சமயத்தில் வத்ராயிருப்பு பிர்க்கா கிஸான் சபை காரியதரிசி தோழர் அழகர்சாமி, ஸ்ரீ குமாரசாமி ராஜாவை சென்னையில் சந்தித்து ஒரு யாதாஸ்தை சமர்ப்பித்தார். மந்திரிசபை தலையிட்டு தகராறை முடித்துவைக்கவேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார். ஆனல் மந்திரிசபை ஒரு நடவடிக்கையும் எடுத்துத் கொள்ளவில்லை.

## போலீஸாரை ஏவிவிட்டனர்

கடந்த 6 மாதங்களாக வத்ராயிருப்பில் ரிசர்வ் போலீஸார் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கிஸான்களிடம் பயங்கர

முறைகளை கையாளுகிறார்கள். 7-3-47ல் பூச்சித்தேவன் என்பவன் கொலை செய்யப்பட்டதாக சொல்லப்படுகிறது. இதைச் செய்தவர்கள் யார் என்று தெரியவில்லை. ஆனால் மிராசுதார்களும், போலீஸாரும் கிஸான் சபை ஊழியர்களுக்காக வேட்டையாடி வருகிறார்கள். 8-3-47 அன்று ஸ்ரீநிவாச தேவரை போலீஸார் விசாரணை செய்தனர். 9ந் தேதியன்று அவரைக் கைது செய்தனர். 5 நாட்களுக்கு அவர் போலீஸ் லாக்கப்பில் இருந்தார். பிறகு அவர் ஸ்ரீவில்லிபுத்தூர் சப் ஜெயிலில் ரிமாண்டு செய்யப்பட்டார். 27ந் தேதியன்று அவரை விடுதலை செய்து விட்டனர்.

9-3-47 அன்று அப்பு பெருமாள் தேவர் என்பவரை போலீஸார் தேடித் திரிந்தனர். அவருடைய மைத்துனருடைய வீட்டை சோதனைபோட்டு, 8 எருமை மாடுகள், ஒரு வெள்ளாடு முதலியவற்றை அவர்கள் பிடித்துக்கொண்டு போயினர். அவரிடமிருந்து ரூ. 50ம் பலாத்காரமாக வாங்கிச் சென்றனர்.

17-3-47ல் கோர்ட்டுக்கு வந்த பெருமாள் தேவரைப்பிடித்து லாக்கப்பில் வைத்தனர். அவரை நன்றாக அடித்துவிட்டனர். அவருக்கு 65 வயதாகிறது. அதே தினத்தன்று கிருஷ்ண தேவரையும், அவருடைய மனைவியையும் கைது செய்து, ஒரு அறிக்கையில் பலவந்தமாக கையெழுத்தும் வாங்கினர். கிருஷ்ண தேவரின் மனைவியை விடுதலை செய்யவில்லை.

குடியானவர்களின் வீடுகளுக்குள் போலீஸார் புகுந்தனர். அவர்களுடைய சொத்துகளை கொள்ளையடித்தனர்; சாமான்களை உடைத்தனர்; அங்கிருந்தவர்களை அடித்தனர். இவை எல்லாம் சர்வ சாதாரணமாக தினந்தோறும் நடந்தன.

விசாரணை நடந்தால் இந்த விஷயங்களை எல்லாம் தக்க சாட்சியங்களுடன் நிரூபிக்கமுடியும். அதைப்போன்ற விசாரணை நடத்துவதற்கு பொதுஜன மந்திரிசபை ஏன் தயங்கவேண்டும்?

தஞ்சாவூர், வத்ராயிருப்பு ஆகிய இடங்களைப்பற்றி மட்டும் தான் ஸ்ரீ பிரகாசம் பேசினார். ஆனால் மற்ற இடங்களிலும் நிலைமை மோசமாகி யிருக்கிறது. ஜமீன்தார், நிலச்சுவான்தார் ஆகியவர்களின் கொடுமை எங்கெல்லாம் தாங்கமுடியாமல் இருக்கிறதோ, அங்கெல்லாம் குடியானவர்கள் எதிர்த்து எழுகிறார்கள்.

## சிவகங்கையில்

தென்னிந்தியாவிலுள்ள பெரிய ஜமீன்களில் சிவகங்கையும் ஒன்று. தமிழ்நாட்டிலுள்ள ஜமீன்கள் எல்லாவற்றிலும் அது தான் பெரியது. சிவகங்கை, திருப்பத்தூர், திருவாடானை தாலூ

காக்களைக்கொண்டது சிவகங்கை ஜமீன். 1939ல் அதனுடைய வருமானம் ரூ. 1483611. சர்க்காருக்கு அது கொடுத்த பேஷ்கஷ் 292627 ரூபாய். 1946-47ல் அதனுடைய வருமானம் மிகவும் அதிகரித்திருக்கிறது. இப்போது 20 லட்ச ரூபாய்க்குமேல் வருஷ வருமானம் வருகிறது. ஜமீனில் பல இனம்தார்களும், மேல்வார தார்களும் இருக்கிறார்கள். ஏழைக் குடியானவர்களை சுரண்டு வதில் இவர்கள் ஜமீன்தார்களையும் மிஞ்சக்கூடியவர்கள்.

ஜமீன் பகுதியில் 3 வகைத் தீர்வைகள் (rent) அமுலிலிருந்து வருகின்றன. (1) பணமாகக் கொடுப்பது. இது இடத்துக்கு இடம் வெவ்வேறு மாதிரியாக இருக்கிறது. நிலத்தின் தரத்திற் குத் தகுந்தபடி இது மாறும். இது 14 ரூபாயிலிருந்து 22 ரூபாய் வரையில் இருக்கிறது. (2) வாரம் கொடுப்பது இரண்டாவது முறை. சாகுபடியில் பாதி ஜமீன்தாருக்குக் கொடுக்கவேண்டும். இது 5 லிருந்து $7\frac{1}{2}$ கலம் வரையில் இருக்கும். (ஒரு கலம் என்பது 54 பட்டணம் படி) அதாவது 55 லிருந்து 86 ரூபாய் வரையில் மதிப்பு. (3) மூன்றாவது வகைத் தீர்வைக்கு வரிசைப் பத்து என்று பெயர். (தான்யமாகக் கொடுக்கவேண்டிய கட்டாயத் தீர்வை). இதற்கு ஏகர் 1க்கு 6 கலம், அதாவது 70 ரூபாய் மதிப்பு இதைத் தவிர, ஆடுமாடுகள் காட்டில் மேயவேண்டுமென்றால் பசு ஒன்றுக்கு 8 அணா விதமும், ஆடு ஒன்றுக்கு 4 அணா விதமும் விவசாயிகள் கொடுக்கவேண்டும். காட்டிலிருந்து விவசாயக் கருவிகளுக்கு வேண்டிய மரம் முதலியவைகளை அவர்கள் கொண்டுவரக்கூடாது. குளங்களில் தூரு எடுப்பதில்லை. விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகள் எதையும் ஜமீன்தார் செய்து கொடுப்பதில்லை. ஒரு குடியானவன் வீடு கட்டவேண்டுமென்றால் அந்த நிலத்தின் 20 வருஷ வரியை அவன் ஜமீன்தாருக்கு முன்னாடியே நஜரானாவாகக் (கட்டாயவரி) கொடுத்துவிடவேண்டும்.

## பட்டா மாறுதல்

பட்டா மாறுதல் என்பது இங்கெல்லாம் மிகவும் கஷ்டமான காரியமாக இருக்கிறது. விவசாயி நிலங்களை வாங்கும்போதோ, விற்கும்போதோ, ரயத்வாரி பகுதிகளில் மாற்றமுடியாது. விவசாயிகளுக்கு இதனால் மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது. ஒரு பட்டாவில் பல கூட்டாளிகள் இருந்தால், பட்டாதாரிடமிருந்து முழு வரியையும் வசூலித்துவிடலாம்.

இனாம்தார் விஷயத்தை கவனிக்கலாம். பிரிட்டிஷ் சர்க்கார், ஜமீன்தார்களை சிருஷ்டித்த மாதிரி, ஜமீன்தார்கள் இந்த இனாம்தார்களை சிருஷ்டித்தார்கள்.

இனும்கள் மூன்று வகைப்படும்:

(1) குறிப்பிட்ட ஒரு தொகையை வாங்கிக்கொண்டு, ஜமீன் தார், அவர்களை இனும்தாராக்குவது.

(2) தமக்கு செய்த சேவைகளுக்காக இனும் நிலங்கள் கொடுப்பது.

(3) ஜமீன்தாரால் கோயிலுக்கு விடப்பட்ட நிலங்கள்.

இப்போது மேற்கூறிய எல்லா வகை இனும்களையும் பணக் காரச் செட்டியார்கள் வாங்கிவிட்டார்கள்.

## இனும்தார்களின் சுரண்டல்

**கொங்குருத்தி கிராமம்:** இங்கு 220 ஏக்கர் நிலம் இருக்கிறது. இதில் 140 ஏக்கர்களே பயிரிடப்படுகின்றன. பாக்கியுள்ளது தரி சாகக் கிடக்கிறது. சுமார் 80 குடியான குடும்பங்கள் இந்த 140 ஏக்கர் நிலத்தை பயிரிட்டு வருகின்றன. சராசரியாக ஒவ்வொரு வரிடமுமுள்ள நிலம் $1\frac{1}{3}$ ஏக்கர் ஆகிறது. நன்செய் பயிர் சாகு படியில் பாதி இனும்தாருக்குப் போய்விடுகிறது. அத்துடன் கலம் ஒன்றுக்கு 2 மரக்கால் வீதம் கங்காணத்துக்காக இனும்தாருக்குக் கொடுக்கவேண்டும். புன்செய் பயிர் சாகுபடியில் மூன்றில் ஒரு பங்கும், 500 கட்டு வைக்கோலும் இனும்தாருக்குக் கொடுக்க வேண்டும். இவற்றைத் தவிர, அந்தந்த நிலங்களிலுள்ள மரங்கள் எல்லாம் இனும்தாருக்குத்தான் சொந்தம். இவைகளுக்கு தண்ணீர் ஊற்றி, விவசாயிகளே பாடுபடுகிறார்கள். பிணத்தைவைத்து எரிப்பதற்கு ஒரு கட்டை வேண்டுமென்றால், அதற்கும் இனும்தா ரின் உத்திரவன்னியில் இந்த மரங்களிலிருந்து அவர்கள் வெட்டிக் கொள்ளக்கூடாது! கடந்த இரண்டு வருஷங்களாக மற்றொரு கொடிய முயற்சியில் இறங்கி யிருக்கிறார்கள். அதாவது விவசாயி களுக்கு உள்ள குடிவார உரிமைகளையும் பறித்துக்கொள்ளும் முறையில், ஒரு பத்திரத்தில் கையெழுத்துபோடும்படி அவர்களை கட்டாயப்படுத்தி வருகிறார்கள்.

இவை எல்லாவற்றையும் தவிர, பொதுவாக, இனும் கிராமங் களில், வேறு வரிகளும் வசூலிக்கப்படுகின்றன. குளம் கிணறு களை ரிப்பேர் செய்வதற்கு என்று சொல்லி அந்த வரிகள் வசூலிக் கப்படுகின்றனவானாலும் உண்மையில் ரிப்பேர்கள் எதுவும் நடப் பதில்லை.

கோர்ட் ஆப் வார்ட்ஸிலிருந்து தாம் ஜமீன் நிர்வாகத்தை மேற்கொண்டதும், வரி பாக்கிகள் எல்லாம் ரத்து செய்யப்போவ தாக சிவகங்கை ஜமீன்தார் கூறினார். ஆனால் போன செப்டம்பர் மாதத்தில், காங்கிரஸ் மந்திரிசபை ஒரு சட்டம் செய்தது. வரி

பாக்கிக்காக குடியானவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடாது என்பது அந்தச் சட்டம். இரண்டு வருஷ வரி பாக்கியை வசூலித்துக்கொள்ள ஜமீன்தாருக்கு இந்த சட்டத்தின்படி உரிமை அளிக்கப்பட்டது. அதிலிருந்து அந்த வரியை பலவந்தமாக வசூலிக்க ஜமீன்தார் முயற்சிசெய்து வருகிறார். விவசாயிகளின் கோரிக்கை பின்வருமாறு :

1. 1355-ம் பசலிவரையுள்ள எல்லா வரிப் பாக்கிகளையும், டிக்கிரிப் பாக்கிகளையும் ரத்துச் செய்யவேண்டும்.

2. நடப்புப் பசலி வரியை இப்போது இருப்பதில் பாதியாக்கவேண்டும்.

3. வாரப்பத்து, வரிசைப்பத்து நிலங்களை தீர்வைப் பத்து நிலங்களாக மாற்றவேண்டும்.

4. நிலத்தின் ஸதலத்தைக் குறிப்பிட்டு ரசீது கொடுக்க வேண்டும்.

5. உடனுக்குடன் பட்டா மாறுதல் செய்வதுடன் இதுவரை மாற்றப்படாத பட்டாக்களை தாமதமின்றி மாற்றவேண்டும்.

6. கால் நடைகளுக்கு மேய்ச்சலுக்கு விதிக்கப்படும் வரியை ரத்துசெய்து கால்நடைகள் மேய்க்க உரிமையளிக்கவேண்டும்.

7. உழவுக் கருவிகளுக்கு மரம் வெட்டவும், உரத்துக்கு தழை அறுக்கவும் உரிமை வேண்டும்.

## இனும் மேல்வாரதாரி கோரிக்கைகள்

1. மேல்வாரதாரிக்கு 4ல் 1 பங்கு வாரம் நிர்ணயிக்கப்பட வேண்டும் (விவசாயிக்கு 4ல் 3 பங்கு)

2. ஒன்பது கொத்தன் வகையறுவுக்குக் கொடுக்கப்படும் சுதந்திரம் களத்திலேயே பட்டுவாடாச் செய்யவேண்டும்.

3. காடுகளில் கால்நடை மேய்ச்சல் உரிமை வேண்டும்.

4. உழவு கருவிகளுக்கு மரம் வெட்டவும், தழை அறுக்கவும் உரிமைவேண்டும்.

## ஐக்கிய போராட்டம்—நியாயமான போராட்டம்

மேற்கண்ட கோரிக்கைகளைப் பெறுவதற்காக காங்கிரஸ், கிஸான் சபை ஆகியவற்றின் ஆதரவில் விவசாயிகள் ஸ்தாபன ரீதியில், ஒன்றுதிரண்டு நிற்கிறார்கள். ஏற்கனவே விவசாயிகள் மீது பல சிவில் வழக்குகளையும்,கிரிமினல் வழக்குகளையும் ஜமீன் தார்களும், இனும்தார்களும் தொடர்ந்திருக்கிறார்கள். மேற்கண்ட

தைப்போன்ற கோரிக்கைகளை சமர்ப்பித்த காங்கிரஸ்காரர்களைக் கூட ஜமீன்தார்களும், இனாம்தார்களும் விடவில்லை. வல்லத்தரசு போன்ற ஆசாமிகளும் பொதுஜன பாதுகாப்பு அவசர சட்டத்தின்படி வேலூர் சிறைக்கு விஜயம் செய்ய நேரிட்டது.

## மதுரை ஜில்லாவில்

பெரியகுளம், மதுரை, மேலூர், நிலக்கோட்டையின் சில பகுதிகள் ஆகியவற்றில் நெல் சாகுபடி முக்கியமாக நடக்கிறது. மகாமோசமான சுரண்டல் முறைகளும் இங்கு தாண்டவமாடுகின்றன. வழக்கம்போல் நிலம், வெளியிடங்களிலுள்ள சில மிராசுதார்கள் கையில் சிக்கியிருக்கிறது. மூன்றில் ஒரு பங்குக்குமேல் குடியானவர்களுக்கு வாரம் கிடையாது. வாரம் முறையும்கூட சில இடங்களில்தான் அமுலிலிருக்கிறது. மற்ற இடங்களில் குத்தகை கொடுக்கவேண்டியிருக்கிறது. கலம் ஒன்றுக்கு 48 படிதான். ஆனால் இங்குள்ள விவசாயிகள் கலம் ஒன்றுக்கு 56 படியாக அளக்கவேண்டும். ஒரு மிராசுதாருக்கு விவசாயி 6 கலம் நெல் கொடுக்கவேண்டும் என்று வைத்துக்கொள்ளுவோம். கலம் ஒன்றுக்கு 8 படிவீதம் அதிகப்படி கொடுக்கவேண்டியிருப்பதால். உண்மையில் அந்த விவசாயி 7 கலம் நெல் கொடுக்க நேரிடுகிறது. காங்கிரஸ் மிராசுதார்களும் இந்த அநியாயப் பழக்கத்தைக் கையாண்டு வருகிறார்கள்.

## ஹிந்து முஸ்லிம் கிஸான் யூனியன்

அளவுமுறை சரியாக இருக்கவேண்டுமென்று கோரி, போன வருஷம் உத்தமபாளையத்திலுள்ள ஹிந்து, முஸ்லிம் கிஸான்கள் ஒன்றுகூடிப் போராடினார்கள். கலத்துக்கு 48 படிதான் என்று மிராசுதார்களை ஒப்புக்கொள்ளச் செய்தார்கள். இதன் விளைவாக உத்தமபாளையம் குடியானவர்களுக்கு மட்டும் 6 ஆயிரம் மூட்டை நெல் லாபமாயிற்று. அதாவது 60 ஆயிரம் ரூபாய் மதிப்பு ஆகிறது. ஆனால் குத்தகை மிகவும் ஜாஸ்தியாக இருக்கிறது. ஒரு குழி (25 செண்ட்டுகள்)க்கு 15 லிருந்து 20 கலம் வரையில் விவசாயிகள் குத்தகை கொடுக்கிறார்கள். எனவே குத்தகை முறையை ஒழித்துவிட்டு, உற்பத்தியில் பாதி வாரம் வேண்டுமென்று விவசாயிகள் கேட்டனர். இந்த சாதாரண கோரிக்கையை நிராகரித்ததுமன்றி, "அடுத்த முறை சாகுபடி செய்வதற்கு நிலம் கொடுக்க மாட்டோம்" என்றும் மிராசுதார்கள் பயமுறுத்தினர். "நிலத்தைத் தரிசு போட்டாலும் போடுவோமேயன்றி, கிசான்கள் கேட்டதைக் கொடுக்கமாட்டோம்" என்பது அவர்களுடைய சுலோகமாக இருக்கிறது.

மதுரைக்கு அருகிலும்கூட நிலைமை இப்படித்தான் இருக்கிறது. 50 சதவிகித வாரம் வேண்டுமென்று விவசாயிகள் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். அத்துடன் அளவு நிர்ணயமும் ஏற்படவேண்டுமென்று அவர்கள் சொல்லுகிறார்கள். கருப்பா ஊரணி, மண்டனேரியைப்போன்ற கிராமங்களில் நிலங்கள் வைத்துக்கொண்டிருக்கும் என். எம். ஆர். சுப்பராமனும், அவரைப் போன்ற மற்ற காங்கிரஸ் தலைவர்களும்கூட, இதைப் போன்ற விவசாயிகளின் நியாயமான குறைகளை நீக்காதது வருந்தத்தக்கது. கருப்பா ஊரணியில் ஸ்ரீ சுப்பராமன், மூத்து ரெட்டியார் ஆகிய இருவரையும் தவிர, மற்ற எல்லாரும் கிஸான்களின் கோரிக்கைகளை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

மற்ற ஜில்லாக்களிலுள்ள விவசாயிகளைப் போலவே திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள விவசாயிகளும், மிராசுதார் கொடுமைகளை எதிர்க்கத் தொடங்கியிருக்கின்றனர். அம்பாசமுத்திரம், தென்காசி, நாங்குனேரி தாலூகாக்களுக்கும் இந்த எழுச்சி பரவிவிட்டது. இந்தப் பகுதியிலுள்ள நிலங்களும், வெளியூர்களிலிருந்துகொண்டு சுகவாசம் செய்யும் சில மிராசுதார்கள் கையில் சிக்கியிருக்கிறது. 1 மரக்கால் விதை விதைக்கும் பகுதி ஒன்றுக்கு 21 மரக்கால் நெல் கொடுக்கவேண்டுமென்று தீர்வை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இதில் நாலில் ஒரு பங்கைக் குறைக்கவேண்டும் என்று விவசாயிகள் கேட்டு வருகிறார்கள். இதை நிராகரிப்பதோடு அல்லாமல், "இனிமேல் விவசாயத்துக்கு நிலம் தரமாட்டோம்" என்றும் சொல்லுகிறார்கள் மிராசுதார்கள். இதனால் மிராசுதார் ஆட்களுக்கும், விவசாயிகளுக்கும் இடையில் அடிதடிகள் நடந்திருக்கின்றன.

நாங்குனேரி தாலூகாவிலுள்ள திருவேங்கிடபுரத்தில், தங்களுடைய தீர்வையில் 4-ல் ஒரு பங்கைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று விவசாயிகள் கேட்டார்கள். இந்த பிரச்னையை மழுப்புவதற்கும், விவசாயிகளை ஏமாற்றுவதற்கும் மிராசுதார்கள் முயற்சித்தனர். இதைக் கண்ட விவசாயிகள், சாகுபடியில் தங்களுக்குச் சேரவேண்டிய பங்கை களத்துமேட்டிலிருந்து எடுத்துச் சென்றனர். உடனே அவர்களைத் தாக்குவதற்காக, கூலிக்கு அமர்த்திய காலிகள் சகிதமாய் மிராசுதார்கள் வந்துவிட்டனர். பிறகு போலீஸ்காரர்கள் வந்து, கிஸான்கள் எடுத்துவந்த நெல்லை பறித்து மிராசுதார்களிடம் ஒப்படைத்துவிடப்போவதாக பயமுறுத்தினர்; கிஸான்கள் நியாயமாகத் தங்களுக்குச் சேரவேண்டிய நெல்லை மட்டுமே எடுத்துவந்திருந்தபோதிலும், போலீஸார் வந்து இப்படிக் கூறினார்கள். விவசாயிகளைச் தாக்க வந்திருந்த காலிகளை அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. இந்தப் பகுதியில்

திருவாடுதுறை மடத்துக்கு ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. பாட்டத்தில் நாலில் ஒரு பங்கு குறைவுவேண்டுமென்று விவசாயிகள் கேட்கிறார்கள். குடியானவர்களின் கோரிக்கையை நிறைவேற்றமுடியாதென்று ஏஜெண்டு மறுக்கிறார். களத்தில் கிடந்து நெல் நாசமாகிறது. இந்த ஜில்லாவிலுள்ள மற்றொரு கிராமமாகிய சிவிலேயில், ஹரிஜன சேவா சங்கத்தைச் சேர்ந்த 200 விவசாயிகள், $\frac{1}{4}$ வாரம் வேண்டும் என்றனர். வெளியூரிலிருந்து ஆட்களை மிராசுதார்கள் அழைத்துவந்து, பயிரை அறுவடை செய்து, நெல்லையும் எடுத்துப்போய்விட்டனர். இதை எதிர்த்து சுமார் 500 ஹரிஜனங்கள் ஒரு கூட்டமாகக் கூடினார்கள். எல்லா கிராமங்களிலும் மேற்கண்ட கோரிக்கையை வற்புறுத்துவது என்று முடிவு செய்தனர். அறுவடையில் தங்களுக்குச் சேர வேண்டிய பங்கை அவர்கள் கேட்டபோது, ஆயிரம் ரூபாய் அபராதம் கட்டவேண்டுமென்று மிராசுதார்கள் சொன்னார்கள். இதில் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால், கம்யூனிஸ்டுகள் இந்த கிராமத்துக்கு அருகில்கூட போகவில்லை என்பது தான்.

## திருச்சினுப்பள்ளியில்

திருச்சி ஜில்லாவில் குடியானவர்களின் நிலைமை இன்னும் மோசமாக இருக்கிறது. 16 2/3 சதவிகிதம்தான் குடியானவனுக்கு வாரமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. குத்தகை விகிதம் மிகவும் அதிகமாக இருக்கிறது. போன நவம்பர், டிசம்பர் மாதங்கள் பெய்த பெருமழையினால் முசிரி தாலுகாவிலுள்ள பல கிராமங்களில் பயிர்கள் நாசமாகிவிட்டன. குடிசைகளும் நாசமாகிவிட்டன. தீர்வை, (rent) நிலவரி ஆகியவற்றை குறைக்கவேண்டுமென்று கிசான் சபை அங்கு கிளர்ச்சி செய்தது. உடனே கிசான் ஊர்வலங்களுக்கும், கூட்டங்களுக்கும் தடை விதித்து 15-2-46 அன்று முசிரி மாஜிஸ்டிரேட் 144வது செக்ஷன் பிரகடனம் செய்துவிட்டார். மேன்மைதங்கிய இந்த மாஜிஸ்டிரேட்டின் செய்கைக்கு காரணங்கள், அவர் பிறப்பித்த உத்திரவில் காணப்படுகின்றன:

"தீர்வை, நிலவரி ஆகியவற்றைக் குறைக்கவேண்டுமென்றும், குடியானவர்களின் நிரந்தர பாத்தியதையை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் செய்யப்படும் கிளர்ச்சி, அமைதிக்கு பங்கம் விளைவிக்கும்."

சமீபத்தில் ஸ்ரீனிவாசபுரத்தில் கிசான் போராட்டம் தொடங்கியது. அதை எவரும் கிளப்பிவிடவில்லை. அது சம்பந்தமாக கைது செய்யப்பட்டு, "கம்யூனிஸ்டுகள்" என்று பட்டமும் சூட்

டப்பட்டார்கள். ஆனால் இந்தியாவில் கம்யூனிஸ்டுக் கட்சி என்பதாக ஒரு கட்சி இருக்கிறது என்பதே இவர்களுக்குத் தெரியாது.

## பொன்னேரியில்

செங்கல்பட்டு ஜில்லாவிலும் நிலைமை மோசமாகத்தான் இருக்கிறது. இந்த ஜில்லாவில் கம்யூனிஸ்டு கட்சியும் இல்லை. கிசான்சபையும் இல்லை. சமீபத்தில்தான் கிசான்சபை யூனிட் ஒன்று பொன்னேரி தாலூகாவில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் செங்கல்பட்டிலிருந்து 4 மைல் தூரத்திலுள்ள ஒழுவலூரில் போராட்டம் எழுந்தது. இந்த கிராமத்திலுள்ள நிலங்களை, பெரும்பாலும் ஹரிஜன குடியானவர்கள் பயிரிட்டு வருகிறார்கள். அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பெரிய நிலச்சுவான்தாரராகிய ஸ்ரீ ஒ. வி. அளகேசன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி. அரசியல் நிர்ணயசபை அங்கத்தினர்களில் அவரும் ஒருவர். சாகுபடியில் 30 சதவிகிதம்தான் குடியானவர்களுக்கு கிடைத்துவந்தது. 1946 செப்டம்பர் மாதத்தில் அறுவடையின்போது, விவசாயிகள் 50 சத விகிதமாக கேட்டனர். மிராசுதார்கள் இதற்கு இணங்கவில்லை. நெல் வயல்கள் அறுவடை செய்யப்படாமல் கிடந்தன. அப்போது சட்டமந்திரியாக இருந்த ஸ்ரீ கே. பாஷ்யம் அங்கு சென்றார். போலீஸாரும் அவருடன்கூட போனார்கள். உடனே கருங்காலிகளைக் கூட்டிக்கொண்டுவந்து, 100 ஏக்கர் நிலமும் அறுவடையாயிற்று. விவசாயிகளின் நியாயமான பங்கையும் மிராசுதார்கள் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. அவர்களுடைய கோரிக்கைகளுக்கும் இணங்கவில்லை.

கேழ்வரகு விளைச்சலை அறுவடை செய்து கிஸான்கள் தங்களுடைய வீடுகளுக்கு எடுத்துக்கொண்டு போனார்கள். இந்த நிலைமையில் அதிகாரிகள் தலையிட்டு, 40 சத விகிதம் விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று சமரஸம் செய்துவைத்தனர். விவசாயிகள் இதற்கு ஒப்புக்கொண்டார்கள். அவர்களுக்குச் சேரவேண்டிய நெல்லாகிய 40 சத விகிதத்தை வாங்கித் தருவதாக ஸ்ரீ ஒ. வி. அளகேசன் வாக்களித்தார். ஆனால் மிராசுதார்கள் ஒரு கூட்டம் போட்டுப் பேசி, இதற்கு நேர்மாறாக முடிவு செய்தனர். அதாவது, தங்களுக்கு வேண்டிய அளவுக்குமட்டும், நிலத்தை சாகுபடிசெய்துகொள்ளுவது என்றும், பாக்கியுள்ளதை தரிசாகப்போட்டு விடுவதென்றும் அவர்கள் தீர்மானித்தனர். மிராசுதார்களின் சுயதேவைப் பூர்த்தி திட்டம் இது. இந்தக் கூட்டத்துக்கு ஸ்ரீ ஒ. வி. அளகேசன் தலைமைவகித்தார்.

சுயதேவைப் பூர்த்தி திட்டத்தின்படி, சில காலிகளை ஒத்தாசைக்கு வைத்துக்கொண்டு, வாய்க்கால்களை ரிப்பேர் செய்யும்

வேலையை ஸ்ரீ ஓ. வி. அளகேசன் 25-10-46 அன்று ஆரம்பித்தார். விவசாயிகளில் ஒருவர் இதை ஆட்சேபித்து "ஒவ்வொரு வருஷமும் நாங்கள் இந்த வேலையைச் செய்கிறோம். இந்த தடவை மட்டும் வெளி ஆட்களை ஏன் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறீர்கள்" என்று அவர் கேட்டார். உடனே அளகேசன் ஆட்கள் அவர் மீது பாய்ந்தனர். இதன் விளைவாக ஏற்பட்ட அடிதடியில் அளகேசனுக்கு காயம்பட்டதாக சொல்லப்படுகிறது. 32 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்கு நடந்து வருகிறது.

பொன்னேரி தாலூகாவிலுள்ள புது வயலிலும், அதை அடுத்துள்ள சில கிராமங்களிலும் உள்ள ஹரிஜன விவசாயத் தொழிலாளர்கள், கூலி அதிகரிப்புக்காக கடந்த 3 மாதங்களாக கிளர்ச்சி செய்துவருகிறார்கள். மிராசுதார்கள் தூண்டுதலின்பேரில் 29 பேர் கைது செய்யப்பட்டனர். இன்னும் 30 பேரை போலீஸார் தேடி வருவதாகச் சொல்லப்படுகிறது. கைது செய்யப்பட்டவர்களுக்கு ஜாமீன் கொடுத்து, அவர்களை மீட்பதற்காக வந்தவர்களை போலீஸார் கைதுசெய்து, பலவித கஷ்டங்களுக்கு உள்ளாக்கினர். இந்த தொழிலாளிகளில் ஆண்களுக்கு $1\frac{1}{2}$ படி நெல்லும், ஸ்திரீகளுக்கு $1\frac{1}{4}$படி நெல்லும்தான் கொடுக்கப்படுகிறது என்பதை முக்கியமாக கவனிக்கவேண்டும். பொதுஜன மந்திரிசபை இருந்தும்கூட, அதிகக் கூலி கேட்பது சட்டவிரோதமாகி விட்டது. அரைப்பட்டினி கிடக்கும் இந்த ஏழை ஹரிஜன விவசாயிகளின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கில்லாமல், ஹரிஜன முன்னேற்றம்பற்றி வானளாவப் பேசுவதில் என்ன பிரயோஜனம்? அதற்கு என்ன அர்த்தம்? 25-3-47ல் அந்த விவசாயிகள், அசெம்பிளி சபாநாயகர் ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளையிடமும், உள்நாட்டு மந்திரி ஸ்ரீ சுப்பராயனிடமும் தூது சென்றனர். இது வரையில் மந்திரிசபை அவர்களுக்கு எதுவும் செய்யவில்லை.

## சேலத்தில்

சேலம் ஜில்லாவில் பல சிறிய ஜமீன்கள் இருக்கின்றன. விவசாயிகள் இங்கு அநியாயமாக சுரண்டப்படுகின்றனர். கூட்டம் போடுவதோ, கோஷம் போடுவதோகூட, இந்த ஜமீன்களில் குற்றமாகும்! நாமக்கல்லிலிருந்து 7 மைல் தூரத்தில் இலங்கநத்தம் என்று ஒரு சிறு ஜமீன் இருக்கிறது. யுத்தத்துக்கு முன்பு, ஏக்கர் ஒன்றுக்கு 6 மூட்டை நெல் வீதம் ஜமீன்தாரிணிக்குக் கொடுத்துவந்தனர். இப்போது 9 மூட்டை கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார். ஜமீன் உத்திரவன்னியில் கொல்லி மலையிலிருந்து ஓடிவரும் தண்ணீரை விவசாயிகள் உபயோகித்துக்

கொள்ளமுடியாது. குளத்தில் மீன் பிடித்துக் கொள்வதற்குக் குடியானவர்கள் 500 ரூபாய் கொடுக்கவேண்டும்.

இரண்டு பண்ணையாட்களை ஜமீன்தாரிணி டிஸ்மிஸ்செய்து விட்டார். இதை வாங்கித் தருவதாக பண்ணையாட்களிடம் வாக்களித்த சப் இன்ஸ்பெக்டர், இதுவரையில் வாங்கித் தரவில்லை. 16-3-47 அன்று நடந்த கிசான்களின் பொதுக்கூட்டம் ஒன்றை ஜமீன்தாரிணியால் அமர்த்தப்பட்ட காலிகள் தாக்கினார்கள். 18-3-47 அன்று, பூசாரி என்ற கிசான் சபை ஊழியரை அந்த காலிகள் பிடித்துக்கொண்டு, "ஜமீன்தாரி முறை ஒழிக என்று கத்தினால் மண்டையை உடைத்துவிடுவோம்" என்று பயமுறுத்தினார்கள்.

21-3-47ல், ஜமீன் விவசாயியாகிய செப்பெருமாள் என்பவரின் பயிர்களை, ஜமீன்தாரிணியின் ஆட்கள் நாசமாக்கினர்.

காவேரிப்பட்டணத்தில் 1941-ம் வருஷத்தில் விவசாயிகளுக்கும், மிராசுதார்களுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டது. அதை கலெக்டர் தீர்த்துவைத்தார். கந்தாகத்துக்கு 6 வள்ளம் வீதம் விவசாயிகளுக்குக் கொடுக்க நிலச்சுவான்தார்கள் ஒப்புக்கொண்டனர். ஆறு வருஷங்களுக்குப் பிறகு, இப்போது அந்த ஒப்பந்தத்தை மிராசுதார்கள் மீறுகின்றனர். விதை விதைப்பதற்கு முன்னால் ஒப்பந்தப்படி 6 வள்ளம் கொடுக்கமுடியாதென்று விவசாயிகளிடம் மிராசுதார்கள் தெரிவித்துவிட்டார்கள். விவசாயிகள் சாகுபடிசெய்ய மறுத்துவிட்டார்கள். பிறகு மிராசுதார்கள் பணிந்துவந்து 6 வள்ளம் கொடுக்க ஒப்புக்கொள்ளுவதாகவும், நிலத்தைப் பயிரிடும்படியும் விவசாயிகளிடம் கூறினார்கள். ஆனால் அறுவடை சமயத்தில் மறுபடியும், "6 வள்ளம் கொடுக்கமுடியாது" என்று தகராறு செய்தார்கள். தாசில்தார் தலையிட்டு, கண்டகத்துக்கு 6 வள்ளம் வாங்கித் தருவதாகச் சொல்லி, விளைச்சலை அறுவடை செய்யச் சொன்னார். அறுவடை ஆனபிறகு, இப்போது வந்து, "சொன்ன சொல்படி மிராசுதார்கள் நடக்க மறுக்கிறார்கள். நான் என்ன செய்யமுடியும்" என்று அந்த தாசில்தார் கூறுகிறார். கிசான்கள் மீது மிராசுதார்கள் பல வழக்குகள் தொடர்ந்திருக்கிறார்கள்.

## தேசபக்தர்கள் ஆதரவு

மேற்கூறியவை எல்லாம் உண்மையாக நடந்தவற்றில் சில சம்பவங்கள்தான். கிராமாந்திரங்களில் என்ன நடக்கிறது என்பதையும், தினந்தோறும் பத்திரிகைகளில் வெளியாகும் அடிதடிகளுக்கு, யார் பொறுப்பாளி என்பதையும் ஒவ்வொரு தேச

பக்திருக்கும், எடுத்துக்காட்டும். விவசாயிகளுக்கு எதிராக பய கர முறைகளை நிலச்சுவான்தார்கள் கையாண்டிருக்கிறார்கள் என் பதற்கும், அந்த நிலச்சுவான்தார்களுக்கு போலீஸ்காரர்கள் உத செய்திருக்கிறார்கள் என்று எடுத்துக்காட்டுவதற்கும் ஆயிர கணக்கான சம்பவங்களை எடுத்துக்காட்டலாம். இந்த மாதிரியா அத்தாட்சிகள் தெளிவாக இருக்கையில், விவசாயிகள் சட்டத்தை அலட்சியம் செய்தார்கள் என்று சொல்லுவது சரியாகுமா?

பிரகாசம் கையாண்ட கொள்கையை, தற்போது வந்துள்ள மந்திரி சபை அடியோடு மாற்றவேண்டும். விவசாயிகளி நியாயமான கோரிக்கைகள் என்ன என்பது புத்தகத்தின் மூ பகுதியில் கூறப்பட்டிருக்கிறது. அவற்றை விவசாயிகளுக்கு அளிப்பதற்கான சட்டங்களை உடனே இந்த மந்திரி சபை இயற்ற வேண்டும். நம்மை எதிர் நோக்கியிருக்கும் உணவு நெருக்கடியை சமாளிப்பதற்கு குறுகியகால முறைகளால் முடியாது. நீண் காலதிட்டம் ஒன்று அதற்கு அவசியம். உணவு உற்பத்தி அதிக புக்கு முக்கியமான வழி என்னவென்றால், விவசாயிகளின் ர த்தை உறிஞ்சும் நிலச்சுவான்தார் முறையை ஒழிக்கவேண்டும். நமது விவசாயப் பொருளாதார நிலைமை அபிவிருத்தி அடைய முடியாதபடி, இந்த நிலச்சுவான்தார்முறை ஒரு சாபக்கேடாக இருக்கிறது. நிலச்சுவான்தார் முறை எந்த உருவத்திலும் தலை தூக்க முடியாதபடி, ஒழிப்பதற்கான சட்டம் இயற்றவேண்டும். தற்போதுள்ள மிகவும் மோசமான, சுரண்டல் முறையை எதிர்த் துப் போராடும்படியும் அவர்கள் ஜனங்களை தூண்டவேண்டும்.

# படித்தீர்களா?

★ தஞ்சை ஜில்லாவில் நடப்பதென்ன?

*எழுதியது :- பி. ஸ்ரீனிவாச ராவ்,*

விலை 2 அணு

★ தமிழ்நாடு 3வது விவசாயிகள் மகாநாடு

விலை 6 அணு

★ தமிழ்நாடு 4வது விவசாயிகள் மகாநாடு

விலை 6 அணு

★ எல்லோருக்கும் உணவு

*எழுதியது :- டாக்டர் ஜி. அதிகாரி,*

விலை 5 அணு

★ கொலைபாதகர் சூதாட்டம்

*எழுதியது :- எம். இஸ்மத்பாஷா,*

விலை 6 அணு

**இன்றேல் இன்றே படியுங்கள்!**

கிடைக்குமிடம் :—

**ஜனசக்தி பிரசுராலயம்,**

6, டேவிட்ஸன் தெரு,

ஜி. டி., சென்னை